# தமிழாயிரம்

## பாடசாலை மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தமிழ் அறிவை வளர்க்க உதவும் ஆயிரம் வினாவிடைத் தொகுதி




## வினாவிடைத் தொகுதி

தொகுப்பாசிரியர்கள்:

**திரு. த. அஜந்தகுமார்** (விரிவுரையாளர்)

**திரு. சி. செரஞ்சன்** (விரிவுரையாளர்)

**செல்வி. ந. சுபாஷினி** (தற்காலிக உதவி விரிவுரையாளர்)

**திருமதி. எம். பீ. எப். பஸ்லா** (தற்காலிக உதவி விரிவுரையாளர்)

வெளியீடு:

**தமிழ்த்துறை,**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**01. தமிழ் இலக்கிய வரலாற்று காலங்களும் அவற்றின் பண்புசார் பெயரீடும்**

| **காலங்கள்** | **பண்புசார் பெயரீடு** |
|---|---|
| சங்க காலம் | இயற்கைநெறிக் காலம் |
| சங்கமருவிய காலம் | அறநெறிக்காலம் |
| பல்லவர் காலம் | பக்தி நெறிக்காலம் |
| சோழர் காலம் | காப்பிய காலம் |
| விஜய நகர நாயக்கர் காலம் | தத்துவநெறிக் காலம் |
| ஐரோப்பியர் காலம் | அறிவியல்நெறிக் காலம் |
| தற்காலம் | நவீன காலம் |

**சங்க கால இலக்கியங்கள் - பதினெண் மேற்கணக்கு நூல்கள்**

- **எட்டுத்தொகை நூல்கள்**

| **நூல்கள்** | **பாடுபொருள்** | **அடிவரையறை** | **தொகுத்தவர்** | **தொகுப்பித்தவர்** | **புலவர்கள்** |
|---|---|---|---|---|---|
| **02.** நற்றிணை | அகம் | 9 - 12 | பெயர் அறியப்படவில்லை | பாண்டியன் மாறன்வழுதி | 175 |
| 03. குறுந்தொகை | அகம் | 4 - 8 | பூரிக்கோ | - | 205 |
| 04. ஐங்குறுநூறு | அகம் | 3 - 6 | புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் | யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை | 5 |
| 05. பதிற்றுப்பத்து | புறம் | 8 - 57 | அறியப்படவில்லை | அறியப்படவில்லை | 8 |
| 06. பரிபாடல் | அகம் , புறம் | 25 - 400 | அறியப்படவில்லை | அறியப்படவில்லை | 13 |
| 07. கலித்தொகை | அகம் | 11 - 80 | நல்லத்துவனார் | அறியப்படவில்லை | 5 |
| 08. அகநானூறு | அகம் | 13 - 31 | உருத்திர சன்மனார் | பாண்டியன் உக்கிரப் பெருவழுதி | 145 |
| 09. புறநானூறு | புறம் | 4 - 40 | அறியப்படவில்லை | அறியப்படவில்லை | 158 |

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏற்றும் கலியோடு அகம் புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை"**

- **பத்துப்பாட்டு நூல்கள்**

| **நூல்கள்** | **பாடுபொருள்** | **அடிகள்** | **பாடிய புலவர்** | **பாட்டுடைத் தலைவன்** | **சிறப்புப் பெயர்கள்** |
|---|---|---|---|---|---|
| 10. திருமுருகாற்றுப்படை | புறம் | 317 | நக்கீரர் | முருகன் | புலவராற்றுப்படை, முருகு |
| 11. பொருநராற்றுப்படை | புறம் | 248 | முடத்தாமக் கண்ணியார் | கரிகாலன் | - |
| 12. சிறுபாணாற்றுப்படை | புறம் | 269 | நல்லூர் நத்தத்தனார் | நல்லியக்கோடன் | - |
| 13. பெரும்பாணாற்றுப்படை | புறம் | 500 | கூடியலூர் உருத்திரங் கண்ணனார் | இளந்திரையன் | பாணாறு, சமுதாயப்பாட்டு |
| 14. கூத்தராற்றுப்படை | புறம் | 583 | பெருங்கௌசிகனார் | நன்னன் சேய் நன்னன் | மலைபடுகடாம் |
| 15. குறிஞ்சிப்பாட்டு | அகம் | 261 | கபிலர் | ஆரிய அரசன் பிரகதத்தன் | பெருங்குறிஞ்சி |
| 16. முல்லைப்பாட்டு | அகம் | 103 | நப்பூதனார் | - | நெஞ்சாற்றுப்படை |
| 17. பட்டினப்பாலை | அகம் | 301 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | கரிகாலன் | பாலைப்பாட்டு, வஞ்சிநெடும்பாட்டு |
| 18. மதுரைக்காஞ்சி | புறம் | 782 | மாங்குடி மருதனார் | நெடுஞ்செழியன் | பெருகுவள மதுரைக்காஞ்சி, மாநகரப்பாட்டு, கூடற்தமிழ், காஞ்சிப்பாட்டு |
| 19. நெடுநல்வாடை | அகமா? புறமா? | 188 | நக்கீரர் | நெடுஞ்செழியன் | - |

**“முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை**
**பெருகு வள மதுரைக் காஞ்சி மருவினிய**
**கோல நெடு நல்வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து”**

- **சங்கமருவிய கால இலக்கியங்கள் - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

| **நூல்கள்** | **பாடுபொருள்** | **ஆசிரியர்** | **பாடல் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 20. திருக்குறள் | அறம்,பொருள், இன்பம் | திருவள்ளுவர் | 1330 |
| 21. நாலடியார் | அறம், பொருள்,இன்பம் | சமண முனிவர்கள் | 400 |
| 22. நான்மணிக்கடிகை | அறம் | விளம்பிநாகனார் | 106 |
| 23. இனியவை நாற்பது | அறம் | பூதஞ்சேந்தனார் | 40 |
| 24. இன்னா நாற்பது | அறம் | கபிலர் | 40 |
| 25. திரிகடுகம் | அறம் | நல்லாதனார் | 100 |
| 26. ஆசாரக்கோவை | அறம் | பெருவாயில் முள்ளியார் | 100 |
| 27. பழமொழி நானூறு | அறம் | முன்னுறை அரையனார் | 400 |
| 28. ஏலாதி | அறம் | கணிமேதாவியார் | 80 |
| 29. சிறுபஞ்சமூலம் | அறம் | காரியாசான் | 102 |
| 30. முதுமொழிக்காஞ்சி | அறம் | கூடலூர்க்கிழார் | 100 |
| 31. கார் நாற்பது | அகம் | கண்ணன் கூத்தனார் | 40 |
| 32. ஐந்திணை ஐம்பது | அகம் | மாறன் பொறையனார் | 50 |
| 33. ஐந்திணை எழுபது | அகம் | மூவாதியார் | 70 |
| 34. திணைமொழி ஐம்பது, | அகம் | கண்ணன் சேந்தனர் | 50 |
| 35.திணைமாலை நூற்றைம்பது | அகம் | கனியன் மேதாவியார் | 150 |
| 36. கைந்நிலை | அகம் | புல்லங்காடனார் | 60 |
| 37.களவழி நாற்பது | புறம் | பொய்கையார் | 40 |

38. இரட்டைக் காப்பியங்கள்

- சிலப்பதிகாரம் - இளங்கோ அடிகள்
- மணிமேகலை - சீத்தலைச் சாத்தனார்

**பக்திசார் இலக்கியங்கள்**

39. சைவம் சார்ந்தவை

- அற்புதத் திருவந்தாதி - காரைக்கால் அம்மையார்
- திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் - காரைக்கால் அம்மையார்
- திருவிரட்டை மணிமாலை - காரைக்கால் அம்மையார்

40. வைணவம் சார்ந்தவை

- முதலாம் திருவந்தாதி - பொய்கையாழ்வார்
- இரண்டாம் திருவந்தாதி - பூதந்தாழ்வார்
- மூன்றாம் திருவந்தாதி - பேயாழ்வார்

41. இலக்கண நூல்

- தொல்காப்பியம் - தொல்காப்பியர் (சர்ச்சைக்குரியது)

42. சங்க இலக்கியத்தில் அதிக அளவு பாடல்களைப் பாடிய புலவர்

- கபிலர் (235 பாடல்கள்)

43. நான்கு பிரதான பா வகைகள்

- ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா

44. அன்பினைந்திணையும் அவற்றின் ஒழுக்கங்களும்

- குறிஞ்சி - புணர்தல்
- முல்லை - இருத்தல்
- மருதம் - ஊடல்
- நெய்தல் - இரங்கல்
- பாலை - பிரிவு  உடன் போக்கு

45. நிலையாமை பற்றிக் கூறும் திணை

- காஞ்சித்திணை

46. பத்து சேர மன்னர்களைப் பற்றிப் பாடும் நூல்

- பதிற்றுப்பத்து

47. 99 பூக்களின் பெயர்கள் கூறப்படும் நூல்

- குறிஞ்சிப்பாட்டு

48. “ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்..” எனும் அடி இடம் பெற்ற நூல்

- பட்டினப்பாலை

49. சங்கமருவிய காலத்தை “அறநெறிக் காலம்” எனக் குறிப்பிட்டவர்

- கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை

50. குடிமக்கள் காப்பியமாக விளங்கும் இலக்கியம்

- சிலப்பதிகாரம்

51. திராவிட சங்கத்தை நிறுவிய சமண முனிவர்

- வச்சிரநந்தி

52. சங்கமருவிய காலத்தில் எழுந்த பௌத்த நூல்

- மணிமேகலை

53. மணிமேகலையில் வரும் மணிபல்லவம் குறிக்கும் இடம்

- இலங்கையிலுள்ள நயினாதீவு

54. “என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே” எனக் கூறியவர்

- திருமூலர்

55. சங்கமருவிய காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த மதங்கள்

- சமணம், பௌத்தம்

56. பல்லவர் காலத்தில் பெருவழக்காயிருந்த பாவினங்கள்

- தாழிசை, துறை, விருத்தம்

57. பல்லவர் காலத்தில் “உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்” என அழைக்கப்பட்ட நூல்

- பாரத வெண்பா

58. தமிழில் முதன் முதல் தோன்றிய கோவை நூல்

- பாண்டிக்கோவை

59. தேவாரம் என்பது

- சைவ சமயக் கடவுளான சிவபெருமான் மீது பாடப்பெற்ற பதிகங்கள் அடங்கிய நூல்

60. பாசுரம் என்பது

- வைணவ சமயக் கடவுளான திருமால் மீது பாடப்பெற்ற பாடல்கள் அடங்கிய நூல்

61**. பல்லவர் கால நாயன்மார்களால் அருளப்பெற்ற இலக்கியங்கள் (சைவ இலக்கியங்கள்)**

| **நாயன்மார்கள்** | **இலக்கியங்கள்** |
|---|---|
| • திருஞானசம்பந்தர் | தேவாரம் (1 - 3 ஆம் திருமுறை) |
| • திருநாவுக்கரசர் | தேவாரம் (4 - 6 ஆம் திருமுறை) |
| • சுந்தரர் | தேவாரம் (7 ஆம் திருமுறை) |
| • மாணிக்கவாசகர் | திருவாசகம் திருக்கோவையார் (8 ஆம் திருமுறை) |

| | |
|---|---|
| • சேந்தனார்,திருமாளிகைத்தேவர் | திருவிசைப்பா |
| • சேந்தனார் | திருப்பல்லாண்டு |
| • சேரமான் பெருமாள் நாயனார் | பொன்வண்ணத்தந்தாதி<br>திருக்கைலாய ஞான உலா |

**ஆழ்வார்களால் அருளப்பெற்ற இலக்கியங்கள்**

| **ஆழ்வார்கள்** | **இலக்கியங்கள்** |
|---|---|
| 62. ஆண்டாள் | திருப்பாவை, நாச்சியார் திருமொழி |
| 63 தொண்டரடிப் பொடியாழ்வார் | திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, |
| 64. திருமங்கையாழ்வார் | திருவெழுகூற்றிருக்கை,திருக்குறுத்தாண்டகம் திருநெடுந்தாண்டகம், பெரிய திருமொழி, சிறிய திருமடல், பெரிய திருமடல் |
| 65. பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி |
| 66. குலசேகரப் பெருமாள் | பெருமாள் திருமொழி |
| 67. நம்மாழ்வார் | திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி. |
| 68. மதுரகவியாழ்வார் | “கண்ணினுள் சிறுதாம்பு” எனத் தொடங்கும் பத்து பாசுரங்கள் |
| 69. திருமழிசையாழ்வார் | நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் |
| 70. திருப்பாணாழ்வார் | “அமலனாதிபிரான்” எனத் தொடங்கும் பத்துப் பாசுரங்கள் |

71. பல்லவர் காலத்தில் எழுந்த பக்திசாரா இலக்கியங்கள்

- சிற்றிலக்கியங்கள்
- உரைநடை நூல்கள்
- இலக்கண நூல்கள்

72. பல்லவர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்கள்

- நந்திக்கலம்பகம்
- முத்தொள்ளாயிரம்
- பாரத வெண்பா
- பெருங்கதை  கொங்குவேளிர் மாக்கதை
- பாண்டிக்கோவை

73. பல்லவர் காலத்தில் எழுந்த உரைநடை நூல்கள்

- ஸ்ரீ புராணம்
- கயசிந்தாமணி
- இறையனார் களவியலுரை

74. பல்லவர் கால இலக்கண நூல்கள்

- சங்க யாப்பு
- பாட்டியல் நூல்

75. சமண சமயத்தை தழுவிய பல்லவ மன்னன்

- மகேந்திரவர்மன்

76. உலகியற் காதல் கூறும் சிற்றிலக்கியங்கள்

- முத்தொள்ளாயிரம்
- பாண்டிக்கோவை

77. தமிழில் முதலில் எழுந்த சதகம்

- திருச்சதகம் (திருவாசகம்)

78. ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களை “நாலாயிர திவ்விய பிரபந்தம்” எனும் பெயரில் தொகுத்தவர்

- நாதமுனிகள்

79. நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன்

- மூன்றாம் நந்திவர்மன்

80. தமிழில் முதல் எழுந்த உலா இலக்கியம்

- திருக்கைலாய ஞான உலா

81. நாயன்மார்கள் பாடிய பக்திப்பாடல்களைத் திருமுறையாகத் தொகுத்தவர்

- நம்பியாண்டார் நம்பி

82. வடமொழியும் தமிழ் மொழியும் கலந்து உருவான நடை

- மணிப்பிரவாள நடை

83. காப்பிய இலக்கணம் குறித்துக் கூறும் நூல்

- தண்டியலங்காரம்

84. காப்பியம் என்பது

- பொருட் தொடர்நிலைச் செய்யுளாகும்

85. காப்பியத்தின் இரு வகைகள்

- பெருங்காப்பியம்
- சிறுகாப்பியம்

86. பெருங்காப்பியம் என்பது

- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் பாடுவதாகும்

87. சிறுகாப்பியம் என்பது

- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கனுள் ஒன்றோ பலவோ குறைந்து வருவதாகும்.

- **ஐம்பெரும் காப்பியங்கள்**

| **நூல்** | **ஆசிரியர்** | **காலம்** | **நூல் அமைப்பு** | **சமயம்** | **பா வகை** | **நூலின் சிறப்புப் பெயர்கள்** |
|---|---|---|---|---|---|---|
| 88. சிலப்பதிகாரம் | இளங்கோ அடிகள் | கி.பி 2 ஆம் நூற்றாண்டு | 3 காண்டங்கள்<br>30 காதைகள் 509 அடிகள் | சமணம் | நிலைமண்டில ஆசிரியப்பா | குடிமக்கள் காப்பியம், நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் |
| 89. மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் | கி.பி 2 ஆம் நூற்றாண்டு | 30 காதைகள் 4755 வரிகள் | பௌத்தம் | நிலைமண்டில ஆசிரியப்பா | துறவுக் காப்பியம் அறக் காப்பியம் இயற்றமிழ்க் காப்பியம் மணிமேகலைத் துறை |
| 90. சீவகசிந்தாமணி | திருத்தக்க தேவர் | கி.பி 9 ஆம் நூற்றாண்டு | 13 இலம்பகம் 3145 | சமணம் | விருத்தப்பா | மணநூல்<br>முக்தி நூல்<br>காம நூல்<br>மறைநூல் |
| 91. வளையாபதி | - | கி.பி 9 ஆம் நூற்றாண்டு | 72 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன | சமணம் | விருத்தப்பா | - |
| 92. குண்டலகேசி | நாதகுத்தனார் | கி.பி.9 ஆம் நூற்றாண்டு | 224 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன | பௌத்தம் | விருத்தப்பா | குண்டலகேசி விருத்தம், அகலகவி |

- **ஐஞ்சிறு காப்பியம்**

| **நூல்** | **ஆசிரியர்** | **நூலமைப்பு** | **பா வகை** | **சமயம்** | **வேறு பெயர்கள்** |
|---|---|---|---|---|---|
| 93.சூளாமணி | தோலாமொழித் தேவர் | 12 சருக்கம்<br>2330 பாடல் | விருத்தம் | சமணம் | - |
| 94.நீலகேசி | - | 10 சருக்கம்<br>894 பாடல் | விருத்தம் | சமணம் | நீலகேசி |
| 95.உதயகுமார காவியம் | - | 6 சருக்கம்<br>369 பாடல் | விருத்தம் | சமணம் | - |
| 96.யசோதர காவியம் | வெண்சைவலூர் உடையார் வேள் | 5 சருக்கம்<br>320 பாடல் | விருத்தம் | சமணம் | - |
| 97.நாககுமார காவியம் | - | 5 சருக்கம்<br>170 பாடல் | விருத்தம் | சமணம் | நாக பஞ்சமி கதை |

98. சோழர் காலத்தில் எழுந்த இலக்கண நூல்கள்

- யாப்பருங்கலக்காரிகை :- அமிதசாகரர்
- தண்டியலங்காரம் :- தண்டியாசிரியர்
- யாப்பருங்கலம் :- அமிதசாகரர்
- நேமிநாதம் :- குணவீர பண்டிதர்
- வீரசோழியம் :- புத்தமித்திரன்
- நம்பியகப்பொருள் :- நாற்கவிராச நம்பி
- நன்னூல் :- பவணந்தி முனிவர்

99. சோழர் காலத்தில் சிறப்பாக வழங்கப்பட்ட சமயம்

- சைவம்

| சிற்றிலக்கிய வகை | இலக்கியம் | ஆசிரியர் |
|---|---|---|
| 100. பரணி | மோகவதைப் பரணி<br>அஞ்சைவதைப்பரணி<br>பாசவதைப்பரணி | தத்துவராயர்<br>தத்துவராயர்<br>வைத்தியநாத தேசிகர் |
| 101. உலா | திருவாரூருலா<br>திருவானைக்காவுலா<br>ஏகாம்பரநாதலோ<br>மதுரைச் சொக்கநாதலோ<br>திருக்காளத்திநாதருலா | அனந்தகவி வீரராகவமுதலியார்<br>காளமேகப்புலவர்<br>இரட்டையர்<br>புராணத்திருமலைநாதர்<br>கவிராசபிள்ளை |
| 102. கலம்பகம் | காசிக்கலம்பகம்,<br>மதுரைக்கலம்பகம்<br>தில்லைக்கலம்பகம்<br>கச்சிக்கலம்பகம்<br>திருவாமாத்தூர்க் கலம்பகம்<br>புள்ளிருக்கும்வேலூர்க் கலம்பகம்<br>திருவரங்கக் கலம்பகம் | குமரகுருபரர்<br>குமரகுருபரர்<br>இரட்டையர்<br>இரட்டையர்<br>படிக்காசுப்புலவர்<br>பிள்ளைப் பெருமாள் ஐயங்கர் |
| 103. பிள்ளைத்தமிழ் | மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்<br>முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர்<br>குமரகுருபரர் |
| 104. நான்மணிமாலை | நால்வர் மணிமாலை<br>திருவாரூர் நான்மணிமாலை | சி.சிவப்பிரகாச சுவாமிகள்<br>குமரகுருபரர் |
| 105. மும்மணிக்கோவை | பண்டாரமும்மணிக் கோவை<br>சிதம்பர மும்மணிக்கோவை<br>நம்பெருமாள்மும்மணிக்கோவை | குமரகுருபரர்<br>குமரகுருபரர்<br>திருக்குருகைப் பெரும கவிராயர் |
| 106. தூது | சிவஞான பாலைய சுவாமிகள்<br>நெஞ்சுவிடு தூது | உமாபதி சிவாச்சாரியார். |
| 107. சதகம் | தொண்டை மண்டலச் சதகம் | படிக்காசுப் புலவர் |

| | | |
|---|---|---|
| 108. அந்தாதி | நீரோட்டமகஅந்தாதி,<br>திருவரங்கத்தந்தாதி | பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் |

109. சோழர் காலத்தில் எழுந்த இதிகாச காப்பியம்

- கம்பராமாயணம் (கம்பர்)

110. கந்த புராணத்தை எழுதியவர்

- கச்சியப்ப சிவாச்சாரியார்

111. அருண்மொழித்தேவர் எனும் இயற்பெயர் கொண்ட சேக்கிழாரால் பாடப்பட்ட இலக்கியம்

- பெரியபுராணம்

112. மூவருலா எனும் உலா பிரபந்தத்தைப் பாடியவர்

- ஒட்டக்கூத்தர்

113. சோழர் காலத்தில் எழுந்த நாடகம்

- இராஜ இராஜேஸ்வரம்

114. நாயக்கர் காலத்தில் எழுந்த பொதுமக்கள்சார் இலக்கியங்கள்

- முக்கூடற்பள்ளு
- திருக்குற்றாலக் குறவஞ்சி
- நொண்டி நாடகம்

**நாயக்கர் கால இலக்கண நூல்களும் அதன் ஆசிரியர்களும்**

| **நூல்** | **ஆசிரியர்** |
|---|---|
| 115.மாறனகப்பொருள்,மாறனலங்காரம் | திருகுருகைப் பெருமாள் கவிராயர் |
| 116. சிதம்பரப் பாட்டியல் | பரஞ்சோதி முனிவர் |
| 117. இலக்கண விளக்கம் | வைத்தியநாத தேசிகர் |

118. நாயக்கர் கால உரையாசிரியர்கள்

- நச்சினார்க்கினியர்
- அடியார்க்கு நல்லார்
- பரிமேலழகர்
- பெரியவாச்சான் பிள்ளை

119. திருப்புகழ், சகலகலாவல்லி மாலை ஆகியவற்றைப் பாடியவர்கள்

- திருப்புகழ் - அருணகிரிநாதர்
- சகலகலாவல்லி மாலை - குமரகுருபரர்

120. சித்தர்களின் எண்ணிக்கை

- 18

121. 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இத்தாலியிலிருந்து மதுரைக்கு வந்து தங்கிய கிறிஸ்தவர்

- தத்துவபோத சுவாமிகள் (றொபட் டீ.நொபிலி)

122. கொன்ஸ்ரன்ரைன் யோசப் பெஸ்கி எனும் இயற்பெயர் கொண்டவர்

- வீரமாமுனிவர்

123. தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர்

- வீரமாமுனிவர்

124. "வேத விளக்கம்" என்னும் நூலுக்கு எதிராக எழுந்த லூதர் சபையார் எழுதிய கண்டன நூல்

- திருச்சபை பேதகம்

125. பஞ்சதந்திரக்கதை, விநோதரச மஞ்சரி ஆகிய நூல்களின் ஆசிரியர்கள் முறையே

- தாண்டவராய முதலியார், வீராசாமிச் செட்டியார்

126. தமிழின் முதல் அங்கத இலக்கியம்

- பரமார்த்த குரு கதை (வீரமா முனிவர்)

127. தமிழின் தொடக்க கால நாவல்களும் அதன் ஆசிரியர்களும்

- பிரேமகலாவத்யம் (1893) - குருசாமிசர்மா
- அசன்பே சரித்திரம் (1885) - சித்திலெப்பை
- பிரதாப முதலியார் சரித்திரம் (1889) - வேதநாயகம் பிள்ளை
- கமலாம்பாள் சரித்திரம் (1995) - ராஜம் அய்யர்
- பத்மாவதி சரித்திரம் (1898) - அ.மாதவையா
- தீனதயாளு (1902) - நடேசசாஸ்திரி
- மோகனாங்கி (1895) - தி. த சரவணமுத்துப்பிள்ளை.

128. வீரமாமுனிவரால் எழுதப்பட்ட காப்பியத்தின் பாட்டுடைத் தலைவன்

- யேசுநாதரின் தந்தையான சூசையப்பர் (தேம்பாவணி)

129. முகைதீன் புராணத்தை இயற்றியவர்

- வண்ணக் களஞ்சிப் புலவர்

130. கிறிஸ்த்தவக் கம்பர் என்று அழைக்கப்பட்டவர்

- எச்.ஏ கிருஷ்ணபிள்ளை

131. மதிவாணன் என்னும் இலக்கியத்தைப் படைத்தவர்

- சூரிய நாராயண சாஸ்திரியார்

132. தமிழ் நாடகத்துறையின் தந்தை

- பம்மல் சம்பந்த முதலியார்

133. திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் மொழிப்பெயர்த்தவர்

- ஜி.யூ.போப், எல்லீஸ் போன்ற மேலை நாட்டவர்

134. “வசன நடையில் கைவந்த வல்லாளர்” எனச் சிறப்பிக்கப்பட்டவர்

- ஆறுமுகநாவலர்

135. தமிழ்ப்பற்றால் தம் பெயர்களை மாற்றிக் கொண்ட தமிழறிஞர்கள்

- மறைமலை அடிகள் (சுவாமி வேதாசலம்)
- பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி)

136. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலின் ஆசிரியர்

- கால்டுவெல் ஐயர்

137. ஐரோப்பியர் காலத்தில் தமிழுக்கு அறிமுகமான ஆக்க இலக்கிய வடிவங்கள்

- உரைநடை
- புனைகதை (நாவல்,சிறுகதை)
- நவீன கவிதை

138. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு (கால அடிப்படையிலான பாகுபாடு)

- ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் - கி.பி. 13 - 17
- போர்த்துக்கேயர் காலம் - கி.பி 1621 - 1658
- ஒல்லாந்தர் காலம் - 1658 - 1796
- ஆங்கிலேயர் காலம் - 1796 - 1948
- தற்காலம் - 1948க்கு பின்

139. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறும் முதற் புலவர்

- ஈழத்துப் பூதந்தேவனார்

140. சங்க இலக்கியங்களில் இடம்பெறும் ஈழத்துப் பூதந்தேவனாருடைய பாடல்கள்

- 07 பாடல்கள்

(அகநானூறு - 88,231,337) (குறுந்தொகை - 189,343,360) (நற்றிணை - 366)

- **ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த இலக்கியங்கள்**

| **பாடுபொருள்** | **நூல்கள்** | **ஆசிரியர்** | **பாடல் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 141.வரலாறு | வையாபாடல்<br>கைலாய மாலை<br>கோணேசர் கல்வெட்டு | வையாபுரி ஐயர்<br>முத்துராச கவிராசர்<br>கவிராசர் | 104 விருத்தப் பாக்கள்<br>310 கண்ணிகள் |
| 142.சமயம் | தட்சிண கைலாய புராணம்<br>திருக்கரசைப் புராணம்<br>வியாக்கிரதபாத புராணம் | செகராசசேகரன்<br>-<br>வைத்தியநாத தம்பிரான் | 7 சருக்கம்<br>170 விருத்தபாக்கள்<br>- |
| 143.சோதிடம் | சரசோதிமாலை<br>பரராசசேகர மாலை | போசராச பண்டிதர்<br>சோமசன்மா | 12 படலங்கள்<br>9 படலங்கள் |
| 144.வைத்தியம் | செகராசசேகரம்<br>பரராசசேகரம் | -<br>- | 1600 பாடல்கள்<br>12000 பாடல்கள் |
| 145.பொதுமக்கள் சார்பு | கதிரைமலைப் பள்ளு<br>கண்ணகி வழக்குரை | -<br>சகவீரன் | 130 செய்யுள்கள்<br>15 காதைகள் |
| 146.காப்பியம் | இரகுவம்சம் | அரசகேசரி | மூன்று காண்டம்<br>26 படலம்<br>2444 விருத்தம் |

147. ஈழத்தில் எழுந்த முதல் தமிழ் நூல்

- சரசோதிமாலை

148. ஈழத்தில் தமிழ் மொழியும் இலக்கியமும் வழக்கிலிருந்தமைக்கான கல்வெட்டுப் பாக்கள்

- அநுராதபுர நானு நாட்டார் கல்வெட்டுப்பா
- பதவியாக் கல்வெட்டுப்பா
- பண்டுவஸ்நுவர கல்வெட்டுப்பா
- கோட்டகம கல்வெட்டுப்பா

149. ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களுள் காலத்தால் முந்தியது

- கதிரைமலைப் பள்ளு

150. ஆரியசக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த தழுவல் இலக்கியங்கள்

- கண்ணகி வழக்குரை
- இரகுவம்சம்

151. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் வரண்ட காலம் எனப்படுவது

- போர்த்துகேயர் காலம்

- **போர்த்துகேயர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள்**

| **இலக்கிய வகை** | **இலக்கியம்** | **ஆசிரியர்** | **வேறுபெயர்** | **பாடல்** |
|---|---|---|---|---|
| 152. பள்ளு | ஞானப்பள்ளு | அறியப்படவில்லை | வேதப்பள்ளு | 257 செய்யுள் |
| 153. அம்மானை | அர்ச். யாகப்பர் அம்மானை | பேதுருப் புலவர் | சந்தியாகுமையோர் அம்மானை | 53 பகுதி |
| 154. புராணம் | ஞானானந்த புராணம் | தொம்பிலிப்பு | - | 1104 விருத்தப் பாக்கள் |

155. ஈழத்தின் முதலாவது அம்மானை இலக்கியம்

- அர்ச். யாகப்பர் அம்மானை

156. போர்த்துக்கேயர் காலத்தின் பிரதான சமயம்

- கத்தோலிக்கம்

157. ஞானப்பள்ளு இலக்கியம் ஆக்கப்பட்ட யாப்பு வகைகள்

- சிந்து, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா

158. புரட்டஸ்தாந்து மதத்தை ஈழத்தில் அறிமுகம் செய்தவர்

- ஒல்லாந்தர்கள்

159. ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற புராணங்கள்

- சிவராத்திரி புராணம் :- வரதபண்டிதர்
- ஏகாதசி புராணம் :- வரத பண்டிதர்
- பிள்ளையார் கதை :- -
- யோசேப்புப் புராணம் :- கூழங்கைத் தம்பிரான்

160. திருச்செல்வர் காவியத்தைப் பாடியவர்

- பூலோகசிங்க முதலியார் (அருளப்ப நாவலர்)

161. ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற பிரபந்த வடிவங்கள்

- பள்ளு
- கோவை
- அம்மானை
- தூது

162. ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற சோதிட, வைத்திய நூல்களும் அதன் ஆசிரியர்களும்

- சந்தான தீபிகை (சோதிடம்) - இராமலிங்க முனிவர்
- அமுதாகரம் (வைத்தியம்) - வரத பண்டிதர்

163. ஒல்லாந்தர் காலத்தில் அந்தாதி பாடியவர்களுள் முக்கியமானவர்கள்

- நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
- இணுவில் சின்னத்தம்பிப் புலவர்

164. தேசிய உணர்வைக் கட்டியெழுப்பும் தன்மை கொண்ட ஈழத்து இலக்கியம்

- பறாளை விநாயகர் பள்ளு

165. தண்டிகைக் கனகராயன் என்பவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பள்ளு இலக்கியம்

- தண்டிகைக் கனகராயன் பள்ளு

166. விசயந்துக்களால் ஏற்படும் தீங்குகளுக்கான மருத்துவ முறையைக் கூறும் ஒல்லாந்தர் கால நூல்

- அமுதாகரம்

167. யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலின் ஆசிரியர் மற்றும் பதிப்பாசிரியர்

- மாதகல் மயில்வாகனப் புலவர், வி.வி.சதாசிவப்பிள்ளையவர்கள்

168. ஒல்லாந்தர் கால அகப்பொருள் இலக்கியங்கள்

- கல்வளை அந்தாதி :-நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
- மறைசை அந்தாதி :-நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
- பஞ்சவன்னத்தூது :-இணுவில் சின்னத்தம்பிப் புலவர்
- குருநாதசுவாமி கிள்ளை விடு தூது :-வரதபண்டிதர்
- கரவை வேலன் கோவை :-இணுவில் சின்னத்தம்பிப் புலவர்

- வெருகல் சித்திரவேலாயுதர் காதல் :-வீரக்கோன் முதலியார்

169. ஒல்லாந்தர் கால இலக்கியத்தில் பயன்படுத்தபட்ட யாப்பு வடிவங்கள்

- விருத்தப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை, அகவற்பா, வஞ்சிப்பா

- **19 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இலக்கிய முயற்சிகள்**

170. **உரைநடை இலக்கியங்கள்**

(அ) நாவல்கள்

அஸன்பே சரித்திரம்

மோகனாங்கி

(ஆ) பாட நூல்கள்

பாலபோதம்

இலக்கணச் சுருக்கம்

இலக்கண வினாவிடை

சைவ வினா விடை

நித்திய கருமவிதி

பால கணிதம்

நியாய இலக்கணம்

வீச கணிதம்

வான சாஸ்திரம்

கணக்கதிகாரம்

இலங்கைப் பூமிசரித்திரம்

நன்னெறிக் கதா சங்கிரகம்

(இ) ஆய்வு நூல்கள்

தமிழ் புளூராக்

பாவலர் சரித்திர தீபகம்

திராவிடப் பிரகாசிகை

(ஈ) அறிவியல் நூல்கள்

மனுஷஅங்காதிபாதம்

வைத்தியாகாரம்

மனுஷசுகரணம்

கெமிஸ்தம்

இந்து பதார்த்த சாரம்

171. **செய்யுள் இலக்கியங்கள்**

1. புராணங்கள்

    சாதி நிர்ணய புராணம்

    சிதம்பர சபாநாதர் புராணம்

    நகுலேஸ்வர புராணம்

    திருவாக்குப் புராணம்

    கோட்டுப் புராணம்

    முகைதீன் புராணம்

    கனகி புராணம்

    தால புராணம்

2. ஊஞ்சல்

    மூளாய் சித்திர விநாயகர் ஊஞ்சல்

    சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல்

3. கலம்பகம்

    மறைசைக் கலம்பகம்

4. கோவை

    அருளம்பலக் கோவை

    அடைக்கலக் கோவை

5. சதகம்

    வீரபத்திர சதகம்

    திருச்சதகம்

6. அகவல்

    நல்லைக் கந்தன் அகவல்

7. அந்தாதி

    மாவை அந்தாதி

    திருகோணமலை அந்தாதி

    நல்லை அந்தாதி

8. குறவஞ்சி

    நல்லைக் குறவஞ்சி

    வண்ணைக் குறவஞ்சி

நகுலமலைக் குறவஞ்சி

திருகோணமலைக் குறவஞ்சி

9. தூது

தத்தைவிடு தூது

கிள்ளைவிடு தூது (நல்லூர் சந்திரசேகர பண்டிதர் குறவஞ்சி)

10. வெண்பா

நீராவிக்கலி வெண்பா

நல்லை வெண்பா

11. பதிகம்

வல்லிபுரநாதர் பதிகம்

12. கீர்த்தனை

சிவதோத்திரக் கீர்த்தனை

நல்லூர் கந்தன் கீர்த்தனை

13. திருப்புகழ்

மறைசைத் திருப்புகழ்

சந்தத் திருப்புகழ்

நவரத்தின திருப்புகழ்

14. கும்மி

ஞான அஹீதாக் கும்மி

172. **மொழிபெயர்ப்பு நூல்கள்**

1) அரிச்சந்திர நாடகம்
2) குறிஞ்சிப் பாட்டு
3) பொருநராற்றுப்படை
4) யாழ்ப்பாண வைபவமாலை
5) வேதாகமம் - ஆங்கிலம், தமிழ்

173. **இலக்கண நூல்கள்**

1) நன்னூற் சுருக்கம்
2) தமிழ் வியாகரணம்
3) இலக்கணத் தெளிவு
4) இலக்கணச் சந்திரிகை

174. **நாடகங்கள்**

1) சபா நாடகங்கள்
2) விலாசங்கள்
    - வாளபீமன் விலாசம்
    - விஜய தர்ம விலாசம்
    - தரும புத்திர விலாசம்
    - எஸ்தாக்கியர் விலாசம்
    - இராம விலாசம்
    - மாணிக்கவாசகர் விலாசம்
    - இரத்தின வல்லி விலாசம்
    - நளச்சக்கரவர்த்தி விலாசம்
    - மதனவல்லி விலாசம்
    - பதிவிரதை விலாசம்
    - பூதத்தம்பி விலாசம்
3) டிறாமாமோடி

175. **அகராதிகள்**

1) தமிழ் - தமிழ் அகராதி
2) தமிழ் - ஆங்கில அகராதி
3) ஆங்கிலம் - தமிழ் அகராதி

176. **பத்திரிகைகள்**

1) உதய தாரகை
2) உதயாதித்தன்
3) வித்தியாதர்ப்பணம்
4) பாலிய நேசன்
5) இலங்கை நேசன்
6) சத்திய வேத பாதுகாவலன்
7) சைவ உதயபானு
8) விஞ்ஞான வர்த்தினி
9) முஸ்லிம் நேசன்
10) இந்து சாதனம்
11) வைத்திய விசாரணி
12) சைவாபிமானி
13) சன்மார்க்க போதினி

177. **பதிப்பு முயற்சிகள்**

1) ஆறுமுக நாவலர் பதிப்புகள்
2) சி.வை.தாமோதரம்பிள்ளை பதிப்புகள்
3) ச.தம்பிமுத்துப் பிள்ளை பதிப்புகள்
4) வல்வை. ச. வைத்தியலிங்கம் பிள்ளை பதிப்புகள்
5) காரைத்தீவு மு. கார்த்திகேய ஐயர் பதிப்புகள்
6) வித்துவ சிரோமணி பென்னம்பலம் பிள்ளை பதிப்புகள்.

178. கனகி புராணத்தை இயற்றியவர்

- புலவர் சுப்பையா

179. ஈழத்தில் எழுந்த முதல் நாவல்

- அசன்பே சரித்திரம் (சித்திலெப்பை)

180. தமிழ் நூற் பதிப்புத்துறைக்கு அடிக்கல் வைத்தவர்

- ஆறுமுகநாவலர்

181. இலங்கையின் முதல் தமிழ்ப் பத்திரிகை

- உதயதாரகை (1841)

182. 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் அறிமுகமான நவீன இலக்கிய வடிவங்கள்

- நாவல், சிறுகதை

183. ஈழத்தில் தமிழ்க் கவிதையில் இடதுசாரிச் சிந்தனைப் போக்கை முதலில் பிரதிபலித்தவர்

- அ.ந.கந்தசாமி

184. "ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்" என்ற காவியத்தின் ஆசிரியர்

- மஹாகவி

185. சன்மார்க்க ஜெயம் (வீரசிங்கன் கதை) என்ற புதினத்தின் ஆசிரியர்

- சி.வை.சின்னப்பப் பிள்ளை (1905)

186. நொறுங்குண்ட இருதயம் என்ற நூலின் ஆசிரியர்

- மங்கள நாயகம் தம்பையா

187. ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள்

- சி.வைத்தியலிங்கம்
- இலங்கையர்கோன்
- சம்பந்தன்

188. “பாரதமாத திருப்பள்ளியெழுச்சி” என்ற பாடலுக்குச் சொந்தக்காரர்

- பாரதியார்

189. “பாரதியார்” பொதுமக்களின் உள்ளத்தைக் கவரக் கூடியதாகக் கையாண்ட யாப்பு வகைகள்

- சிந்து, தெம்மாங்கு

190. 15 ஆம் நூற்றாண்டின் பின் எழுந்த சிற்றிலக்கியங்களிலும் நாட்டுப்பாடல்களிலும் பாரதி கையாண்ட யாப்பு வகை

- சிந்து

191. சிந்து என்பது

- ஓரெதுகை பெற்ற இரண்டு அடிகள் தனிச்சொல் பெற்று அளவு ஒத்து வருதல்

192. 20 ஆம் நூற்றாண்டின் பிற்காலத்தில் எழுந்த சிந்து வகைகள்

- காவடிச்சிந்து, நொண்டிச் சிந்து, ஆனந்தக்களிப்பு, தெம்மாங்கு

193. பாரதியாரைப் பின்பற்றியும் புதிய யாப்பு வகைகளைப் பயன்படுத்தியும் பாடல்களை பாடிய மூவர்

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசன், கம்பதாசன்

194. பாரதியாரால் “எழுக புலவன்” என்று ஆசிர்வதிக்கப்பட்ட புலவர்

- பாரதிதாசன்

195. பாரதிதாசனால் இயற்றப்பட்ட நூல்கள்

- புரட்சிக்கவி, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, கடல்மேற்குமிழி

196. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதை நூல்கள்

- மலரும் மாலையும், கருணைக்கடல், பாரசீகக் கவியமுதம்

197. கம்பதாசனின் இயற்பெயர்

- ராஜப்பா

198. “புத்தர் புனர் ஜென்மம்” என்ற பாடலைப் பாடியவர்

- கம்பதாசன்

199. “கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது” என்ற பாடலை மக்களுக்கு அறிமுகம் செய்தவர்

- நாமக்கல் இராமலிங்கப்பிள்ளை

200. நாமக்கல் இராமலிங்கப்பிள்ளையினால் இயற்றப்பட்ட நூல்கள்

- தமிழன் இதயம், அவளும் அவனும், பிரார்த்தனை, சங்கொலி, கவிதாஞ்சலி

201. “தமிழ்க்குமரி” என்னும் பாடல் தொகுப்பில் மூலம் தமிழுக்கு அறிமுகமான புலவர்

- ச.து.சுப்ரமணிய யோகிகள்

202. ச.து.சுப்ரமணிய யோகிகளால் இயற்றப்பட்ட இரு நூல்கள்

- மேரிமக்தலேனா, அகல்யா

203. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இயற்றிய நூல்கள்

- நாமகள் புகழ்மாலை, நல்லையந்தாதி, பதிற்றுப்பத்து

204. "புல்லின் இதழ்கள்" என்ற புதுக்கவிதையை வெளியிட்ட அமெரிக்க ஆங்கிலேயர்

- வோல்ட் விட்மன்

205. துப்பறியும் நாவல்கள் பலவற்றையும் எழுதிய ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்

- ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், தமிழ்வாணன்

206. கல்கியின் சரித்திர நாவல்கள் என குறிப்பிடப்படுபவை

- பார்த்தீபன் கனவு, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம்

207. சீறாப்புராணத்தை இயற்றியவர்

- உமறுப்புலவர்

208. உமறுப்புலவருக்குத் தமிழைக் கற்றுத்தந்த புலவர்

- கடிகை முத்துப்புலவர்

209. ஆயிரம் யானைகளை வெற்றி கொண்டவர் மீது பாடப்படும் சிற்றிலக்கியம்

- பரணி

210. நளவெண்பாவின் ஆசிரியர்

- புகழேந்திப் புலவர்

211. திருக்குறளின் வேறு பெயர்கள்

- திருவள்ளுவம், உத்தரவேதம், பொய்யாமொழி, வாயுரை வாழ்த்து, தெய்வநூல், பொதுமறை, முப்பால், தமிழ்மறை

212. கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் என்ற சிறுகதையின் ஆசிரியர்

- புதுமைப்பித்தன்

213. கம்பராமயண தோற்றத்துக்கு உதவி புரிந்த வள்ளல்

- சடையப்ப வள்ளல்

214. சீறாப்புராணம் தோற்றத்துக்கு உதவி புரிந்த வள்ளல்

- சீதக்காதி வள்ளல்

215. சத்திய சோதனை நூலின் ஆசிரியர்

- காந்தியடிகள்

216. “அக்கினிச் சிறகுகள்” என்ற நூலின் ஆசிரியர்

- அப்துல் கலாம் (தமிழில் தந்தவர் மு. சிவலிங்கம்)

217. “இருட்டறை” எனும் சிறுகதை ஆசிரியர்

- பித்தன் கே.எம்.எம் ஷா

218. “மலையகமும் தமிழ் இலக்கியமும்” எனும் கட்டுரையை ஆக்கியவர்

- பேராசிரியர் சி. தில்லைநாதன்

219. ஸி.வி.வேலுப்பிள்ளையின் நூல்கள்

- வீடற்றவன், வாழ்வற்றவன் வாழ்வு, வழிப்போக்கன், தேயிலைத் தோட்டத்திலே

220. சேகுனாப் புலவர் எழுதிய காப்பியங்கள்

- புதுகுஷ்ஷாம், திருமணிமாலை, குத்பு நாயகம், திருக்காணப்புராணம்

221. திருமணிமாலையின் இரு காண்டங்கள்

- இயற்கையன் காண்டம், செயற்கையன் காண்டம்

222. மலையக மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் வகையில் புதுமைப்பித்தனால் எழுதப்பட்ட சிறுகதை

- துன்பக்கேணி

223. “மல்லிகை” எனும் சஞ்சிகையின் ஆசிரியர்

- டொமினிக் ஜீவா

224. இலங்கையில் வெளிவரும் சிற்றிதழ்கள்

- மல்லிகை, ஞானம், ஜீவநதி, தமிழருவி, கலைமுகம், படி அர்ச்சனா முதலியன

225. “மக்கத்துச் சால்வை” எனும் கதையின் ஆசிரியர்

- எஸ்.எல்.எம்.ஹனீபா

226. நூலுக்கு நூலாசிரியர் அல்லாத பிறர் வழங்கும் உரை

- அணிந்துரை

227. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த குழந்தையின் பெயர்

- மணிமேகலை

228. “அமுத சுரபி” எனும் பாத்திரத்தை வைத்திருந்தவர்

- ஆபுத்திரன்

229. “கடலை நம்பி” எனும் பாடலை இயற்றியவர்

- மகாகவி பாரதியார்

230. இராமனால் அனுமனுக்குப் பதிலாக இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட தூதுவன்

- அங்கதன்

231. புதிய ஆத்திச்சூடியை எழுதியவர்

- மகாகவி பாரதியார்

232. புரட்சிக்கவிஞன் எனப்பட்டவர்

- பாரதிதாசன்

234. அரிச்சந்திர புராணத்தை இயற்றியவர்

- வீரகவிராயர்

235. முழுமையாகக் கிடைக்கப் பெறாத பெருங்காப்பியங்கள்

- வளையாபதி, குண்டலகேசி

236. ஆசிய ஜோதி என்ற நூலின் ஆசிரியர்

- கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

237. ஈழ நாட்டில் தமிழரசர் காலத்தில் உருவாக்கப் பெற்ற நூல் நிலையம்

- சரஸ்வதி மகாலயம் (சரஸ்வதி பண்டாரம்) - நல்லூர் சட்டநாதர் சிவாலயம் அருகில் உருவாக்கப்பட்டது)

238. இஸ்லாமிய புலவர்கள் அறிமுகப்படுத்திய யாப்பு வகைகள்

- கிஸ்ஸா, மஸாலா, நாமா, முனாஸாத்து

239. இலங்கையில் முதலில் தமிழ் அகராதியை தொகுத்தவர்

- கு.கதிரவேற்பிள்ளை

240. முதன் முதலாக மருத்துவ நூல்களைத் தமிழில் எழுதியவர்

- டாக்டர் கிறீன்

241. டாக்டர் கிறீன் எழுதிய நூல்கள்

- மனுக்ஷ அங்காதி பாதம், இரண வைத்தியம், கெமிஸ்தம்

242. “அர்த்தமுள்ள இந்து மதம்” என்ற நூலின் ஆசிரியர்

- கண்ணதாசன்

243. “தங்கத்தாத்தா” எனப் போற்றப்பட்டவர்

- நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

244. இலங்கையில் தமிழ் நாவல்களை அதிக அளவில் எழுதியவர்

- செங்கை ஆழியான் (இயற்பெயர் க.குணராசா)

245. நாவல் என்பதைக் குறிப்பதற்குப் பயன்படும் தமிழ்ச் சொல்

- புதினம்

246. தமிழின் பஞ்ச இலக்கணங்கள்

- எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி

247. "நீராரும் கடலுடுத்த" என்ற தமிழ் தெய்வ வணக்கப் பாடலைப் பாடியவர்

- பேராசிரியர்.பே.சுந்தரம்பிள்ளை (மனோன்மணீயம் என்ற நாடக நூல்)

248. முதன் முதல் ஹைக்கு எனும் கவிதை வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது

- யப்பான்

249. கவிச்சக்கரவர்த்தி எனும் நாடகத்தின் ஆசிரியர்

- கு. அழகிரிசாமி

250. தலித் இலக்கியத்தின் முன்னோடி எனத் தமிழகத்தாரால் பாராட்டப்படும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்

- கே. டானியல்

251. நாவல் என்ற இலக்கிய வடிவம் முதன்முதலாகத் தோற்றம் பெற்ற நாடு

- இத்தாலி

252. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்ற நூலை எழுதியவர்

- ஆ.சதாசிவம்

253. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் என்ற நூலின் ஆசிரியர்

- சி.கணேசையர்

254. பாவலர் சரித்திர தீபகம் எனும் நூலின் ஆசிரியர்

- ஆ.சதாசிவம் பிள்ளை

255. ஆறுமுகநாவலர் 1849 இல் நல்லூரில் நிறுவிய அச்சியந்திரசாலை

- வித்தியானுபாலன யந்திரசாலை

256. தென்னாசியாவிலே முதன்முதல் நிறுவப்பட்ட பெண்கள் விடுதிப்பாடசாலை

- உடுவில் மகளிர் கல்லூரி

257. உதயதாரகையின் ஆரம்பகால பத்திராதிபர்களாக (பத்திரிகை ஆசிரியர்களாக) நியமிக்கப்பட்டிருந்தவர்கள்

- கென்றிமார்ட்டின்
- செத்பேசன்

258. சைமன் காசிச்செட்டி அவர்கள் உருவாக்கிய பத்திரிகையின் பெயர்

- உதயாதித்தன்(1841)

259. ஈழத்தில் முதன்முதலாக தமிழ்ப்புலவர் வரலாற்றை எழுதியவர்

- சைமன் காசிச்செட்டி (தமிழ் புளூட்டாக்)

260. கலைக்களஞ்சியத்தின் முன்னோடி என அழைக்கப்படுபவர்

- ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை

261. தமிழ் நூற்பதிப்புத்துறைக்கு கால்கோள் அமைத்தவர்

- ஆறுமுகநாவலர்

262. "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் போற்றப்பட்டவர்

- ஆறுமுகநாவலர்

263. இலங்கையில் சித்த மருத்துவம் தொடர்பாக எழுந்த முதல் நூல்

- அமுதாகரம் (வரத பண்டிதர்)

264. நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் இயற்றிய நூல்களின் பெயர்கள்

- கல்வளையந்தாதி
- மறைசையந்தாதி
- கரவைவேலன்கோவை
- பறாளைவிநாயகர்பள்ளு
- நாலு மந்திரி கும்மி

265. வெள்ளிப்பாதசரம் என்ற சிறுகதையினை எழுதியவர்

- இலங்கையர்கோன்

266. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இலக்கிய விமர்சனம் வேர்விட்டு வளர்வதற்கான பெரும் அடித்தளத்தையிட்டவர்

- பேராசிரியர் வி. செல்வநாயகம்

267. ஈழத்தில் "பிரபஞ்சயதார்த்தவாதம்"(மெய்யுள்) என்ற இலக்கியக் கொள்கையினை அறிமுகப்படுத்தியவர்

- மு.தளையசிங்கம்

268. விமர்சனத்துறையில் "நற்போக்கு இலக்கியம்" எனும் கொள்கையினை முன்வைத்தவர்

- எஸ்.பொன்னுத்துரை

269. வட்டுக்கோட்டை மிசனரி உருவாக்கப்பட்ட ஆண்டு

- 1823

270. "பெரியபுராண வசனம்" என்னும் நூலை எழுதியவர்

- ஆறுமுகநாவலர்

271. ஈழத்தில் முதன்முதல் திருமுருகாற்றுப்படைக்கு உரை எழுதியவர்

- ஆறுமுகநாவலர்

272. அருட்பா மருட்பா வழக்கினைக் கொண்டு சென்ற ஈழத்தவர்

- சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை

273. சுத்தப்பதிப்பினை மேற்கொண்ட சிறப்பிற்குரியவர்

- ஆறுமுகநாவலர்

274. நன்னூலை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தவர்

- இலாசரஸ்

275. ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை எழுதிய நூல்கள்

- நன்னெறிக் கதாசங்கிரகம்
- இந்து தேச சரித்திரம்
- ஏசுநாதர் திருச்சதகம்
- நன்நெறிமாலை
- வான சாஸ்த்திரம்
- சாதாரண இதிகாசம்
- சர்போத சரணம்

276. "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" எனப் பாடியவர்

- விபுலானந்தர்

277. ஈழத்தில் தோன்றிய முதல் வைத்திய நூல்

- செகராசசேகரம்

278. யாழ்ப்பாண வைபவ கௌமுதியை எழுதியவர்

- கல்லடி வேலுப்பிள்ளை

279. சங்க இலக்கியங்களில் இலங்கையை ஈழம் என்னும் பெயரால் குறிப்பிட்ட நூல்

- பட்டினப்பாலை

280. யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்படும் (காலவெள்ளத்தால்) அழிந்த நூல்கள் இரண்டும்

- இராசமுறை
- பரராசசேகரன் உலா

281. முதன்முதலாக தக்கிண கைலாச புராணம் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு

- 1887ஆம் ஆண்டு கார்த்திகேச ஐயர், சிவசிதம்பர ஐயர்

282. தக்கிண கைலாச புராணத்தை அரும்பத பொருட்குறிப்புடன் பதிப்பித்தவர்

- புலோலி ச. வைத்திலிங்கதேசிகர்

283. "போர்த்துக்கேயர் காலத்தில் தமிழ்க்கூத்துக்கள் பல்பரிமான வளர்ச்சிநிலையைக் கண்டன" என்று கூறியவர்

- கலாநிதி சி. மௌனகுரு

284. நளவெண்பாவின் மூல நூல்

- நளோபாக்கியானம்

285. “கதிர்காமசேகரமானா முதலி” எனும் இயற்பெயரைக் கொண்டவர்

- இணுவில் சின்னத்தம்பி புலவர்

286. “தீ” எனும் நாவலின் ஆசிரியர்

- எஸ். பொன்னுத்துரை

287. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே சிறப்பாக தமிழிலே தோன்றிய காவியப் பண்புகள் நிறைந்த இலக்கியமாகத் திகழ்வது

- திருச்செல்வர் காவியம் (பூலோகசிங்க முதலியார்)

288. யோசேப்புப் புராணத்தை இயற்றியவர்

- கூழங்கைத் தம்பிரான்

289. மருதப்பக் குறவஞ்சி எனும் நூலை இயற்றியவர்

- பிலிப்பு தெ. மெல்லோப் பாதிரியார்

290. ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்களுள் முதன் முதலாக தனிமனிதனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற பள்ளு இலக்கியம்

- தண்டிகைக் கனகராயன் பள்ளு (மாவை சின்னக் குட்டிப் புலவர்)

291. தண்டியலங்காரம் எத்தனை அணிகளைப் பற்றிப் பேசுகிறது

- 35

292. யாழ்ப்பாண வைபவமாலையை எழுதும்படி தூண்டியவர்

- மேக்றூன்

293. ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற நாடக இலக்கியங்களுள் வட்டுக்கோட்டை கணபதி ஐயர் பாடிய நாடக இலக்கியங்கள்

- அலங்காரரூபன்
- அதிரூபவதி
- மலையநந்தினி
- வாளபிமன்

294. உதயதாரகை பத்திரிகை எந்த மிசனரிமாரால் இயற்றப்பட்டது

- அமெரிக்க மிசனரிமாரால்

295. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏறத்தாழ தோன்றிய பத்திரிகைகளின் எண்ணிக்கை

- 25 பத்திரிகைகள்

296. நாவலரைத் தவிர ஈழத்தில் தோன்றிய பதிப்பாசிரியர்கள் நால்வரைக் குறிப்பிடுக

- சி.வை தாமோதரம்பிள்ளை

- ச.தம்பிமுத்துப்பிள்ளை
- வல்லை.ச. வயித்திலிங்கம்பிள்ளை
- வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை

297. நன்னூற் சுருக்கத்தின் ஆசிரியர்

- சவுந்தரநாயகம் பிள்ளை

298. வண.ஜே.நைற் என்ற மிசனரியின் தலைமையில் அகராதியாக்கும் குழு நியமிக்கப்பட்ட ஆண்டும் அதில் ஈடுபட்டவர்களும்

- 1833
- சாமுவேல்
- பேர்சிவல்
- வின்சிலோ
- கபிரியல் திசரா
- கறோல் விஸ்வநாதபிள்ளை
- வில்லியம் நெவின் சிதம்பரபிள்ளை
- இருபாலை சேனாதிராசமுதலியார்

299. விபுலானந்தரின் யாழ் நூல் அரங்கேற்றப்பட்ட இடம்

- கரந்தைத் தமிழ்ச்சங்கம்

300. ஈழத்தில் தோன்றிய முதல் காப்பியம்

- இரகுவம்சம் (அரசகேசரி)

301. இலங்கைத் தமிழ் நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்

- கலையரசு சொர்ணலிங்கம்

302. தமிழர் சால்பு என்ற நூலை எழுதியவர்

- பேராசிரியர்.சு வித்தியானந்தன்

303. மஹாகவியின் இயற்பெயர்

- து. உருத்திரமூர்த்தி

304. முத்தமிழ்ப்புலவர் என அழைக்கப்படும் ஈழத்துப் புலவர்

- மு.நல்லதம்பி

305. முத்தமிழ் வித்தகர் என அழைக்கப்படுபவர்

- விபுலானந்தர்

306. பேராசிரியர் சு.வித்தியானந்தனின் முதல் நூல்

- இலக்கியத் தென்றல்

307. தினகரன் பத்திரிகையின் முதல் ஆசிரியர்

- கே.மயில்வாகனம்

308. ஈழத்துப் புலவர்களில் வெண்பா பாடுவதில் புகழ் பெற்றவர்

- புலவர்மணி.ஏ.பெரியதம்பிப்பிள்ளை

309. சங்கிலி என்ற வரலாற்று நாடகத்தை எழுதியவர்

- பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை

310. ஈழத்து இலக்கியச் செல்நெறி என்னும் நூலை எழுதியவர்

- பேராசிரியர்.சி.சிவலிங்கராஜா

311. காட்டாறு என்ற நாவலின் ஆசிரியர்

- செங்கையாழியான்

312. ஈழத்தில் திறனாய்வு இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்

- பேராசிரியர்.க.கைலாசபதி

313. மஹாகவி உருத்திரமூர்த்தி எழுதிய நூல்கள்

- காவியங்கள் :- கண்மணியாள் காதை
  :- ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்
  :- கல்லழகி
  :- சடங்கு
  :- கந்தப்ப சபதம்
  :- தகனம்
- நாடகங்கள் :- கோடை
  :- புதியதொரு வீடு
  :- முற்றிற்று
- கவிதைத் தொகுப்புகள் :-வள்ளி
  :-குறும்பா
  :-வீடும் வெளியும்
  :-பொருள் நூறு

314. காரைதீவு பெண்கள் வித்தியாசாலையின் ஸ்தாபகர் யார்?

- சுவாமி விபுலானந்தர்

315. தற்காலத்தில் "கவிக்கோ" என அழைக்கப்படுபவர்

- அப்துல் ரகுமான்

316. "சொல்லின் செல்வர்" என அழைக்கப்படும் தமிழ்ப் பேராசிரியர்

- ரா.பி. சேதுப்பிள்ளை

317. தமிழக அரசின் முதல் திருவள்ளுவர் விருது பெற்றவர்

- குன்றக்குடி அடிகளார்

318. உத்தரவேதம் என அழைக்கப்படும் நூல்

- திருக்குறள்

319. தமிழ்வேதம் என அழைக்கப்படும் சமய நூல்

- திருமந்திரம்

320. தத்தைவிடு தூது பாடியவர்

- தி.த. சரவணமுத்துப்பிள்ளை

321. தமிழ்த்தென்றல் என்று சிறப்பிக்கப்படுபவர்

- திரு.வி.கல்யாணசுந்தரனார்

322. பெரியாழ்வாரின் இயற்பெயர்

- விஷ்ணு சித்தர்

323. “பாண்டியன் பரிசு” என்ற கவிதைத் தொகுதியைப் பாடியவர்

- பாரதிதாசன்

324. “கங்கையில் விடுத்த ஓலை” என்னும் கவிதைத் தொகுதியை எழுதியவர்

- சுவாமி விபுலானந்தர்

325. கம்பராமாயணம் பாடப்பட்ட யாப்பு

- விருத்தம்

326. சீவகசிந்தாமணியில் வரும் சீவகனது தந்தையின் பெயர்

- சச்சிந்தன்

327. யாழ்ப்பாணக்காவியம் படைத்தவர்

- பண்டிதர்.க.சச்சிதானந்தம்

328. மணிமேகலைக் காப்பியத்தில் கூறப்படும் ஈழத்துத்தீவு

- மணிபல்லவம்

329. ஏமாங்கத நாட்டு வருணனை இடம்பெறும் காப்பியம்

- சீவகசிந்தாமணி

330. “மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்” என்ற வாழ்த்துப்பா அடியினையுடைய இலக்கியம்

- சிலப்பதிகாரம்

331. “பிறையன்பன்” என்ற புனைபெயருக்குரிய தமிழறிஞர்

- பேராசிரியர்.சு.வித்தியானந்தன்

332. “பொன்விலங்கு” என்ற நாவலின் ஆசிரியர்

- நா.பார்த்தசாரதி

333. மகாத்மா காந்தியின் சுயசரிதையின் பெயர்

- சத்தியசோதனை

334.சாகித்திய மண்டல பரிசு பெற்ற நந்தியின் நாவல்

- மலைக்கொழுந்து

335. “குறிஞ்சிக்கோமான்” என்ற பெயரில் கவிதைகளைப் புனைந்தவர்

- பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை

336. “தென்னாட்டு பெர்னாட்ஷா” எனப் பராட்டப்பெற்றவர்

- அறிஞர் அண்ணாதுரை

337. பனையின் சிறப்பைப் பாடும் ஈழத்துப் புராணம்

- தால புராணம் (காசிநாதப் புலவர்)

338. செத்துங்கொடை கொடுத்த மன்னன்

- சீதக்காதி

339. “எங்கெங்கும் காணிலும் சக்தியடா ஏழு கடல் அவள் வண்ணமடா” என்று பாடியவர்

- பாரதிதாசன்

340. திருக்குறளில் ஒரே தலைப்பில் அமைந்த இரு அதிகாரங்கள்

- குறிப்பறிதல்

341. மஞ்சுகாசினியம் :இயங்குதமிழியல் எனும் இலக்கண நூலின் ஆசிரியர்

- பண்டிதர் க.சச்சிதானந்தன்

342. தமிழில் முதன் முதல் எழுந்த அங்கத இலக்கியம்

- பரமார்த்த குரு கதை

343. “மானிடனாய்ப் பிறந்து மாயவலையில் சிக்கி மயங்கும் அடியேனை தடுத்தாட்கொள்ள வேண்டும்” என சிவனிடம் முறையிட்டவர்

- சுந்தரமூர்த்தி நாயனார்

344. “வருந்திவந்தோர் அரும்பசிகளைந்து திருத்த முகம் காட்டும் தெய்வகடிஞை” என்பதில் தெய்வகடிஞை எனப்படுவது

- அமுதசுரபி

345. ஷேக்ஸ்பியருக்கு விபுலானந்த அடிகள் தமிழில் இட்ட பெயர்

- செகசிற்பியர்

346. “வெள்ளெருக்குச்சடைமுடியான் வெற்பு எடுத்த திருமேனி” என்ற இராமாயணப் பாடலில் குறிப்பிடப்படும் மலை

- திருக்கைலாயமலை

347. “தண்டலை மயில்களாட............” என்ற பாடலடி இடம்பெறும் காப்பியம்

- கம்பராமாயணம்

348. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

- ஜி.யு.போப்

349. கவிஞர் கண்ணதாசன் எழுதிய கடைசி நூல்

- இயேசு காவியம்

350. மனைவியை தெய்வமாக வழிபட்டவர்

- இராமகிருஸ்ணபரமஹம்சர்

351. தமிழில் எழுந்த முதல் பேரிலக்கியத்தின் மூலக்கதையைக் கூறியவர்

- சாத்தனார்

352. யசோதர காவியத்தின் வடமொழி மூலம்

- புஸ்பதந்தா

353. வடமொழி தர்மசாஸ்திரத்தின் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்

- ஆசாரக்கோவை

354. குசேலபாக்கியானம் என்ற நூலைப் பாடியவர்

- தேவராசப்பிள்ளை

355. கீதா என்பதன் பொருள்

- பாடப்படுவது

356. பாரதி எந்த நாட்டின் தேசிய கீதத்தை மொழிபெயர்த்தார்

- பிரெஞ்சு

357. “நம்மைப்பேணும் தும்பை” என்ற தொடர் அமைந்துள்ள நூல்

- பெரியபுராணம்

358. நாயன்மார் என்பதன் பொருள்

- தலைவன்

359. பக்தி சாரக் என அழைக்கப்படுபவர்

- திருமழிசையாழ்வார்

360. பாரத வெண்பா பாடியவர்

- பெருந்தேவனார்

361. மாறன் சடகோபன் என அழைக்கப்பட்ட ஆழ்வார்

- நம்மாழ்வார்

362. திராவிட வேதம் என அழைக்கப்படும் நூல்

- திருவாய்மொழி

363. புறப்பொருள் வெண்பாமாலையின் ஆதார நூல்

- பன்னிருபடலம்

364. வெற்றி பெற்றோர் சூடும் பூ

- வாகை

365. காய்ச்சீருக்குரிய பா

- வெண்பா

366. வெண்பாப் பாட்டியலின் மறுபெயர்

- வச்சணந்திமாலை

367. இறைத்தொண்டிற்காக வழிப்பறி செய்தவர்

- திருமங்கையாழ்வார்

368. பரகாலன் என்று அழைக்கப்பட்ட ஆழ்வார்

- திருமங்கையாழ்வார்

369. தசாவதானி என்று அழைக்கப்படும் இஸ்லாமியப் புலவர்

- செய்குத்தம்பி

370. தமிழ் வியாசர் என்று அழைக்கப்படுபவர்

- நம்பியாண்டார் நம்பி

371. "நல்ல தீர்ப்பு" என்ற நாடகத்தை எழுதியவர்

- பாரதிதாசன்

372. பிரபுலிங்கலீலை பாடியவர்

- சிவப்பிரகாச சுவாமிகள்

373. நன்னூல் கூறும் நூல் உத்திகள்

- 32

374. நறுந்தொகை என அழைக்கப்படும் நூல்

- வெற்றிவேற்கை

375. ஐங்குநுறூறு கடவுள் வாழ்த்துப் பாடியவர்

- பெருந்தேவனார்

376. ஆண்களின் சிறப்பினைப் புகழ்ந்து பாடும் திணை

- பாடாண் திணை

377. சிறுபஞ்சமூலம் என்பதன் பொருள்

- சிறிய ஐந்து வேர்கள்

378. முருகு என்பதன் பொருள்

- அழகு

379. கண்ணகி சிலம்பில் இருந்த பரல்கள்

- மாணிக்கம்

380. அணிகளின் தாய் என அழைக்கப்படுவது

- உவமை அணி

381. முப்பொறிகள் எனப்படுவது

- மனம், வாக்கு, காயம்

382. "அன்னப்பூரணி" நாவலின் ஆசிரியர்

- பண்டிதர் க.சச்சிதானந்தன்

383. கந்தர்கலி வெண்பா பாடியவர்

- குமரகுருபரர்

384. "வைஷ்ணவகுலபதி" என்று அழைக்கப்படும் ஆழ்வார்

- நம்மாழ்வார்

385. தக்கயாகப்பரணி பாடியவர்

- ஒட்டக்கூத்தர்

386. ஒற்றன் என்ற நாவலின் ஆசிரியர்

- நடேசையர்

387. "நிலக்கிளி" என்னும் நாவலை எழுதியவர்

- அ.பாலமனோகரன்

388. "நீதியே நீ கேள்" என்னும் நாவலை எழுதியவர்

- இளங்கீரன்

389. "அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்" எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர்

- பாரிமகளிர்

390. “பெற்றபெருவளம் பெறாஅர்க்கு அறிவித்தல்” இவ்வரி எவ்விலக்கியத்துடன் தொடர்புடையது

- ஆற்றுப்படை

391. “எம்மைமறந்தாரை நாம் மறக்கமாட்டோமால் ”எனக் கூறும் இலக்கியம்

- சிலப்பதிகாரம்

392. ஏழுபருவத்து மகளிர் எனப்படுபவர்கள்

- பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்

393. ஈழமண்டல சதகம் எழுதியவர்

- ம.கதிரவேற்பிள்ளை

394. “பாற்கஞ்சி” சிறுகதை எழுதியவர்

- வைத்தியலிங்கம்

395. தமிழில் இலக்கிய வரலாறு என்னும் நூலை எழுதியவர்

- பேராசிரியர். கா.சிவத்தம்பி

396. தமிழ் இலக்கண இயல்புகள் என்னும் நூலை எழுதியவர்

- பேராசிரியர் அ.சண்முகதாஸ்

397. மல்லிகை இதழின் ஆசிரியர்

- டொமினிக் ஜீவா

398. குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப்படும் நூல்

- இலக்கண விளக்கம்

399. தினவர்த்தமானி பத்திரிகையின் ஆசிரியர்

- சி.வை. தாமோதரம்பிள்ளை

400. திராவிடப் பிரகாசிகையை எழுதியவர்

- சபாபதி நாவலர்

401. “காலங்கள் சாவதில்லை” நாவலை எழுதியவர்

- பெனடிக்பாலன்

402. ஆசிய ஜோதியைப் பாடியவர்

- கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

403. முதற்சங்கம் பற்றிக் கூறும் நூல்

- இறையனார் அகப்பொருள் உரை

404. “தூக்குமேடை” என்ற நாவலின் ஆசிரியர்

- மு.கருணாநிதி

405. “வீடற்றவன்” நாவலின் ஆசிரியர்

- ஸி.வி. வேலுப்பிள்ளை

406. சடகோபர் அந்தாதி பாடியவர்

- கம்பர்

407. அர்த்தமுள்ள இந்து மதம் எழுதியவர்

- கண்ணதாசன்

408. நாலாயிரத்திவ்ய பிரபந்தங்களைத் தொகுத்தவர்

- ஸ்ரீமத் நாதமுனிவர்

409. பா வகைகளும் அவற்றைப் பாடுவதில் புகழ்பெற்ற புலவர்களும்

- புகழேந்திப்புலவர் :-வெண்பா
- கம்பர் :- விருத்தம்
- காரைக்கால் அம்மையார்:- கட்டளைக் கலித்துறை

410. நேமிநாதத்தின் ஆசிரியர்

- குணவீரபண்டிதர்

411. வீரசோழியத்தின் ஆசிரியர்

- புத்தமித்திரனார்

412. குட்டித் திருவாசகம் எனப் போற்றப்படும் நூல்

- திருக்கருவைப் பதிற்றுப்பத்து

413. அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம் யாருடைய நினைவாக கொண்டாடப்படுகிறது

- சுவாமி விபுலானந்தர்

414. தமிழ் உரைநடையின் தந்தை எனப்போற்றப்படுபவர்

- வீரமாமுனிவர்

415. “தங்கத்தாத்தா” என அழைக்கப்படும் ஈழத்துக் கவிஞர்

- நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

416. காதலியாற்றுப்படை என்ற நூலை எழுதியவர்

- பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

417. கிறிஸ்தவக்கம்பன் எனச் சிறப்பித்து அழைக்கப்படும் புலவர்

- எச்.ஏ கிருஸ்ணபிள்ளை

418. “இத்தாலியக்கம்பன்” எனச் சிறப்பித்து அழைக்கப்படும் புலவர்

- வீரமாமுனிவர்

419. கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர்

- சா.முத்தையா

420. “கள்ளோ காவியமோ” எனும் நாவலை எழுதியவர்

- மு.வரதராசன்

421. காளமேகப் புலவரின் இயற்பெயர்

- வரதர்

422. “ஐயா அருணகிரி அப்பா உன்னைப்போல் மெய்யாக ஓர் சொல் விளம்பினார் யார் அப்பா” என அருணகிரியைப் புகழ்ந்தவர்

- தாயுமானவர்

423. தமிழ் நாட்டில் முதன்முதல் வெளிவந்த அகராதி

- சதுரகராதி

424. திருத்தொண்டர் புராணம் எனப்படுவது

- பெரியபுராணம்

425. அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல்

- திருக்குறள்

426. பண்டைய காலத் தமிழ் எழுத்துக்கள் எவ்வாறு அழைக்கப்படும்

- தமிழி

427. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனப் பாடியவர்

- கணியன் பூங்குன்றனார்

428. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர்

- இளம்பூரணர்

429. செய்யுள் வடிவில் அமைந்து சொற்களின் பொருளை விளக்குவது

- நிகண்டு

430. தமிழ்த் தென்றல் என அழைக்கப்படுபவர்

- திரு.வி.கலியாணசுந்தரம்

431. சேக்கிழாரின் இயற்பெயர்

- அருண்மொழித் தேவர்

432. பாரதிதாசனின் இயற்பெயர்

- கனகசுப்புரத்தினம்

434. சிறுகதை மன்னன், சிறுகதையின் திருமூலர் என்று சிறப்பிக்கப்படுபவர்கள் முறையே

- புதுமைப்பித்தன், மௌனி

435. இலங்கை தொடர்பான முதல் வரலாற்று நாவல்

- விஜயசீலம் (சி.வை.சின்னப்பபிள்ளை)

436. உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தை என அழைக்கப்படுபவர்

- தனிநாயகம் அடிகள்

437. தத்துவக் கருத்துக்களை எடுத்துக் கூறும் பரணி இலக்கியம்

- மோகவதைப் பரணி

438. உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்ற ஆண்டும் இடமும்

- முதல் மாநாடு 1966 :- மலேசியா (கோலாலம்பூர்)
- இரண்டாவது மாநாடு 1968 :- இந்தியா ( சென்னை)
- மூன்றாவது மாநாடு 1970 :- பிரான்ஸ் (பாரிஸ்)
- நான்காவது மாநாடு 1974 :- இலங்கை (யாழ்ப்பாணம்)
- ஐந்தாவது மாநாடு 1981 :- இந்தியா (மதுரை)
- ஆறாவது மாநாடு 1987 :- மலேசியா (கோலாலம்பூர்)
- ஏழாவது மாநாடு 1989 :- மொரீசியஸ்
- எட்டாவது மாநாடு 1995 :- இந்தியா (தஞ்சாவூர்)
- ஒன்பதாவது மாநாடு 2015 :- மலேசியா (கோலாலம்பூர்)
- பத்தாவது மாநாடு 2019 :- அமெரிக்கா (சிகாகோ)

439. ஆசுகவி என அழைக்கப்படும் ஈழத்துப் புலவர்

- கல்லடி.சு.வேலுப்பிள்ளை

440. சிதம்பர மும்மணிக்கோவை பாடிய புலவர்

- குமரகுருபரர்

441. தமிழில் தோன்றிய முதல் இஸ்லாமிய இலக்கியம்

- கனகாபிஷேக மாலை

442. ஆண்டு நிறைவும் அவற்றின் பெயர்களும்

- 1 ஆம் ஆண்டு நிறைவு விழா :- காகித விழா/கடதாசி விழா
- 10 ஆம் ஆண்டு நிறைவு விழா :- தகரம்/அலுமினிய விழா
- 25 ஆம் ஆண்டு நிறைவு விழா :- வெள்ளி விழா
- 50 ஆம் ஆண்டு நிறைவு விழா :- பொன் விழா
- 60 ஆம் ஆண்டு நிறைவு விழா :- வைர விழா
- 75 ஆம் ஆண்டு நிறைவு விழா :- பவள விழா
- 80 ஆம் ஆண்டு நிறைவு விழா :- அமுத விழா
- 100 ஆம் ஆண்டு நிறைவு விழா :- நூற்றாண்டு விழா

443. சிலம்பின் செல்வர் என அழைக்கப்படும் தமிழ் அறிஞர்

- ம.பொ.சிவஞானம்

444. 1974 இல் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு தலைமை தாங்கியவர்

- பேராசிரியர்.சு.வித்தியானந்தன்

445. செய்யுளில் முதல் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது எவ்வாறு அழைக்கப்படும்

- மோனை
  எதுகை (இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது)
  இயைபு (இறுதி எழுத்து ஒன்றி வருவது)

446. "என்பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ" எனக் கூறிய காவிய நாயகன்

- இராமன்

447. "என்னை நன்றாகப்படைத்தனன் இறைவன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று பாடியருளிய சைவப் பெரியார்

- திருமூலர்

448. "தமிழ்ப்புலவரேறு" எனப் போற்றப்படும் ஈழத்தறிஞர்

- குமாரசுவாமிப் புலவர்

449. குழந்தைக் கவிஞர் எனச் சிறப்பிக்கப்படுபவர்

- அழ. வள்ளியப்பா

450. தமிழ்த்தூது என்ற சிறப்பினைப் பெறுபவர்

- தனிநாயகம் அடிகளார்

451. "டிஜிற்றல்" என்ற ஆங்கிலப் பதத்திற்கு உரிய தமிழ்ப் பொருள்

- எண்மானம்

452. "சுந்தர காப்பியம்" என்று அழைக்கப்படும் தமிழ்க் காப்பியம்

- கம்பராரமாயணம்

453. "கற்பனைக் களஞ்சியம்" என்று தமிழர்களால் போற்றப்பட்டவர்

- சிவப்பிரகாசர்

454. இருபொருள்படத் தொடுக்கும் அணி

- சிலேடை அணி

455. தமிழில் முதல் எழுந்த தூது நூல்

- நெஞ்சுவிடுதூது

456. "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவன்" எனப் பாராட்டப்படுபவர்

- சேக்கிழார்

457. “எழுத்து” என்ற இதழ் தொடங்கப்பட்ட ஆண்டு

- 1958 (சி.சு செல்லப்பா)

458. “ஒரு புளியமரத்தின் கதை” எனும் நூலின் ஆசிரியர்

- சுந்தரராமசாமி

459. ஆறுமுகநாவலருக்கு நாவலர் என்ற பட்டத்தை அளித்த ஆதீனம்

- திருவாவடுதுறை ஆதீனம் (தலைவர் - சுப்ரமணிய தேசிகர்)

460. பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு இலங்கையில் கோயில் எடுத்த மன்னன்

- 1ஆம் கஜபாகு

461. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே புலவர் என்று ஆறுமுக நாவலரால் சிறப்பிக்கப்பட்டவர்

- உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்

462. விஞ்ஞானவர்த்தினி என்ற பத்திரிகையை வெளியிட்டவர்

- மூத்ததம்பிச்செட்டியார்

463. குஷிகர் குட்டிக்கதைகள் என்ற நூலின் ஆசிரியர்

மாதவையா

464. “தமிழ்த்தாத்தா” என்று அழைக்கப்படுபவர்

- உ.வே. சாமிநாதையர்

465. இராவ்பகதூர் என்ற விருதளித்து கௌரவிக்கப்பட்டவர்

- சி.வை தாமோதரம்பிள்ளை

466. திருக்குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர்

- திரிகூடராசப்பக் கவிராயர்

467. ஆங்கிலத்தில் தடை செய்யப்பட்ட பாரதியின் சிறுகதை

- ஆறில் ஒரு பங்கு

468. தமிழ்க்கருவூலம் என அழைக்கப்படும் நூல்

- புறநானூறு

469. உலகின் தோற்றம் குறித்துக் கூறும் நூல்

- பரிபாடல்

470. மதுரைத் தமிழ்ச் சங்கத்தினை தமிழ்வேலி என்று கூறிய நூல்

- பரிபாடல்

471. தமிழ்கெழுகூடல் என மதுரையைப் போற்றிய நூல்

- புறநானூறு

472. வினையே ஆடவர்க்குயிர் எனக் கூறும் நூல்

- குறுந்தொகை

473. எட்டுத்தொகை நூல்களில் நாடகப்பாங்கில் அமைந்துள்ள நூல்

- கலித்தொகை

474. புறநானூற்றின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

- ஜி.யு.போப்

475. ஐங்குறுநூற்றில் அந்தாதி முறையில் அமைந்த பத்து

- நொண்டிப்பத்து

476. பாதைக்கதைகளை மிகுதியாகக் கூறும் சங்க அக நூல்

- கலித்தொகை

477. எட்டுத்தொகை நூல்களின் மற்றுமொரு பெயர்

- எண்பெருந்தொகை

478. உண்மை விளக்கம் எழுதியவர்

- மனவாசங்கடந்தார்

479. சான்றோர் அவையில் பயன்படுத்த இயலாச் சொல்லை வேறு சொற்களால் பயன்படுத்துவது

- இடக்கரடக்கல்

480. நூல் முழுவதும் பாடாண் திணையில் பாடப்பெற்ற நூல்

- பதிற்றுப்பத்து

481. மொழிபெயர்க்கை பற்றிக் கூறும் நூல்

- அகநானூறு

482. திருவானைக்கா உலா பாடியவர்

- காளமேகம்

483. தொண்டை மண்டல சதகத்தைப் பாடியவர்

- படிக்காசுப் புலவர்

484. "கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர்" என்பதைக் கூறும் நூல்

- புறநானூறு

485. “ஒருமுலை அறுத்த திருமா உன்னி” இவ்வரிகள் இடம்பெற்றுள்ள இலக்கியம்

- நற்றிணை

486. கலித்தொகை பதிப்பிக்கப்பட்ட ஆண்டும் பதிப்பித்தவரும்

- 1887
  சி.வை.தாமோதரம் பிள்ளை

487. திருக்குறளின் முன்னோடி என அழைக்கப்படும் எட்டுத்தொகை நூல்

- புறநானூறு

488. குடவோலை முறைத் தேர்தல் பற்றிக் குறிப்பிடும் நூல்

- அகநானூறு

489. எட்டுத்தொகை நூல்களுள் பாண்டியர்களைப் பற்றி மட்டும் குறிப்பிடும் நூல்கள்

- கலித்தொகை
- பரிபாடல்

490. பெருந்திணைப் பாடல்கள் இடம்பெற்ற ஒரே சங்க நூல்

- கலித்தொகை

491. குறுந்தொகையைப் பதிப்பித்தவரும் பதிப்பித்த ஆண்டும்

- செவிலிப்பெருமான் அரங்கனார்
- 1915

492. தூதின் வழிகாட்டி என அழைக்கப்படும் நூல்

- நற்றிணை

495. இரும்புக்கடலை என அழைக்கப்படும் நூல்

- பதிற்றுப்பத்து

496. கலித்தொகைக்கு விரிவான உரை எழுதியவர்

- நச்சினார்க்கினியர்

497. பரிபாடல் என்ற நூலின் மறுபெயர்கள்

- இசைப்பாட்டு
- பரிபாட்டு
- பொருட்கலவை நூல்
- தமிழின் முதல் இசைப்பாடல் நூல்

498. மகளிரின் ஐவகை கூந்தல் ஒப்பனை பற்றிக் கூறும் நூல்

- குறுந்தொகை

499. இந்திரவிழா பற்றிக் கூறும் தொகை நூல்

- ஐங்குறுநூறு

500. சங்க காலத்தில் வணிகர்களுக்கு காவாதி, எட்டி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டதாகக் கூறும் நூல்

- நற்றிணை

501. கடம்பர்கள் எனும் கடற்கொள்ளையைப் பற்றிக் குறிப்பிடும் நூல்

- பதிற்றுப்பத்து

502. அம்பா ஆடல் என்பது தைநீராடல் எனக் கூறும் நூல்

- பரிபாடல்

503. காவிரிப்பூம்பட்டினத்தினுடைய பெரும் சிறப்பைச் சொல்ல வந்த நூல்

- பட்டினப்பாலை

504. காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கிய செய்தியைக் கூறும் காப்பியம்

- மணிமேகலை

505. திருமுருகாற்றுப்படையை முதன் முதலில் பக்திப்பாசுரமாகப் பதிப்பித்தவர்

- சரவணப்பெருமாளையர்

506. நெடுநல்வாடை என்பதன் விளக்கம்

- நீண்ட நல்ல வாடை

507. கலம்பகம் பாடுவதில் புகழ் பெற்றவர்

- இரட்டையர்கள் (முதுசூரியர், இளஞ்சூரியர்)

508. காவடிச்சிந்தின் தந்தை என அழைக்கப்படுபவர்

- சென்னிகுளம் அண்ணாமலையார்

509. கலிங்கத்துப்பரணியில் உள்ள தாழிசைகளின் எண்ணிக்கை

- 599

510. சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை

- 96

511. நந்திக் கலம்பகத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

- 144

512. கலம்பக இலக்கியங்களில் தலைச்சிறந்தது

- நந்திக் கலம்பகம்

513. கலம்பகத்தின் உறுப்புக்கள்

- 18

514. “தமிழ் மொழியின் உபநிடதங்கள்” என அழைக்கப்படுபவை

- தாயுமானவர் பாடல்கள்

515. தமிழில் வெளிவந்த முதல் அரசியல் இதழ்

- சுதேச மித்திரன் (1882 ஜி.சுப்ரமணிய ஐயர்)

516. முதலாவது பிள்ளைத்தமிழ் நூல்

- குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் (ஒட்டக்கூத்தர்)

517. தக்கையாகப் பரணியின் வேறு பெயர்

- வீரபத்திர பரணி

518. சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைத் தெளிவாகக் கூறும் நூல்

- பன்னிரு பாட்டியல்

519. சிற்றிலக்கிய வகை 96 என முதன் முதலில் கூறிய நூல்

- பிரபந்த மரபியல்

520. வெண்பாப் பாட்டியலின் வேறு பெயர்

- வச்சணந்திமாலை

521. சிற்றிலக்கிய வேந்தர் என அழைக்கப்படுபவர்

- குமரகுருபரர்

522. உலா பாடுவதில் வல்லவர்

- ஒட்டக்கூத்தர்

523. அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து பாடப்படும் இலக்கியம்

- கலம்பகம்

524. விரிமலர் என்பது எவ்வகைத் தொடர்

- வினைத்தொகை

525. தென்றல்விடு தூது என்ற நூலின் ஆசிரியர்

- பலபட்டடை சொக்கநாதபிள்ளை

526. புவிமன்னராகவும் கவிமன்னராகவும் விளங்கிய பாண்டிய மன்னன்

- தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன்

527. வியாக்கியான சக்கரவரத்தி என அழைக்கப்பட்டவர்

- பெரியவாச்சான் பிள்ளை

528. வரலாற்றுக் குறிப்புக்களைப் பாடல்களுள் பொதிந்து வைத்துப் பாடுவதில் வல்லவர்

- பரணர்

529. பெருங்கதைக் காப்பியத்திற்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்கள்

- உதயணன் கதை
- கொங்குவேளிர் மாக்கதை

530. பெருங்கதைக்கு முதல் நூலாய் அமைந்த நூலும் அந்நூலின் ஆசிரியரும்

- நூல் - வடமொழி பிருகத்கதை
- ஆசிரியர் - துர்விநீதன்

531. வளையாபதி காப்பியம் மேற்கோளாக காட்டப்பட்ட நூல்கள்

  - தொல்காப்பிய உரை
  - சிலப்பதிகார உரை
  - யாப்பருங்கல விருத்தியுரை
  - தக்கயாகப் பரணி

532. நீலகேசிக்கு சமய திவாகர வாமனர முனிவர் இயற்றிய உரை எப்பெயரால் வழங்கப்படும்

- நீலகேசித்திரட்டு
- நீலகேசித்தொகுப்பு

535. நீலகேசிக்கு நிகராய் யாப்பருங்கல விருத்தியாசிரியரால் காட்டப்படும் பிற நூல்கள்

- பிங்கலகேசி
- காலகேசி

536. முதன் முதலில் கருத்துப் படங்கள்(கார்ட்டூன்) வெளிவந்த இதழ்

- இந்தியா

537. வில்லிபாரதம் என்ற நூலில் எடுத்தாளப்பட்ட பேருறுப்பு, சிற்றுறுப்பு

- பேருறுப்பு - பருவம்
- சிற்றுறுப்பு - சருக்கம்

538. ஐம்பெரும் காப்பியங்கள் என்ற தொடரை முதன்முதலில் பயன்படுத்தியவர்

- மயிலைநாதர் (14 ஆம் நாற்றாண்டு) தணிகையுலா

539. சிலப்பதிகாரக் காப்பியம் அமைக்கப்பட்ட யாப்பு வகைகள்

- ஆசிரியப்பா
- வெண்பா
- இடையிடை உரைநடை, விருத்தம்

540. பிரபுலிங்கலீலை என்ற காப்பியத்தை இயற்றியவர்

- சிவப்பிரகாசர்

541. கனவுக்குறிப்பு, முன் உணர்தல் போன்ற உத்தி முறைகளை பெருமளவில் கையாண்ட காப்பியங்கள்

- சிலப்பதிகாரம்
- சீவகசிந்தாமணி
- கம்பராமாயணம்

542. மில்டனின் “paradise lost” என்னும் காப்பியம் தமிழில் எப்பெயரில் மொழிபெயர்க்கப்பட்டது, அதனை மொழிபெயர்த்தவர்

- சுவர்க்கநீக்கம்
- சுப்ரமணியமுதலியார்

543. பதிணெண் கீழ்க்கணக்கு நூல்களுள் சோழனும் அவனது படை வீரர்களும் செய்த வீரப்போர் பற்றிக் குறிப்பிடும் நூல்

- களவழி நாற்பது

544. நெல் முதலான விளைச்சலை அடித்து அழிதூற்றும் களத்தைப் பாடுவது

- ஏரோர் களவழி

545. பகைவரை அழிக்கும் போர்க்களத்தைப் பாடுவது

- தேரோர் களவழி

546. ஐந்திணை ஐம்பது பாடல் வைப்பு முறை எவ்வாறு அமைந்துள்ளது

- முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல்

547. சிறுபஞ்சமூலத்தில் அடங்கியுள்ள பொருட்கள்

- கண்டன் கத்தரி
- சிறுவழுதிணை
- சிறுமல்லி
- பெருமல்லி
- நெருஞ்சில்

548. ஏலாதி என்பதனுள் அடங்குகின்ற மருந்துப் பொருட்கள்

- ஏலம்
- இலவங்கம்
- சிறுநாவற்பூ
- சுக்கு
- மிளகு
- திப்பிலி

549. கருக்கு என்ற தலித்திய நாவலின் ஆசிரியர்

- பாமா

550. கடல் புறா என்ற நாவலின் ஆசிரியர்

- சாண்டில்யன்

551. கனகாம்பரம் என்ற சிறுகதைத் தொகுதியின் ஆசிரியர்

- கு.ப.ராஜகோபாலன்

552. சொற்கலை விருது என்ற நூலின் ஆசிரியர்

- எஸ்.வையாபுரிப்பிள்ளை

553. தமிழ் இலக்கிய வரலாற்றை முதலில் ஆங்கிலத்தில் எழுதியவர்

- எஸ்.எஸ்.பூரணலிங்கம்பிள்ளை

554. தாகூரின் படைப்புக்களை தமிழில் மொழிபெயர்த்தவர்

- த.நா.குமாரசாமி

555. தாழ்த்தப்பட்டோர் விண்ணப்பம் பாடிய கவிஞர்

- கவிமணி

556. பூக்காரி என்னும் கவிதையை எழுதியவர்

- ந.பிச்சமூர்த்தி

557. வாடிவாசல் என்ற நாவலின் ஆசிரியர்

- சி.சு.செல்லப்பா

558. வ.வே.சு ஐயரின் சிறுகதைத் தொகுதி

- மங்கையர்க்கரசியின் காதல்

559. தமிழின் முதல் சிறுகதை

- குளத்தங்கரை அரசமரம் (வா.வே.சு ஐயர்)

560. ஒரே மூச்சில் படித்து முடித்தற்குரிய கதையே சிறுகதை எனக் குறிப்பிட்டவர்

- அட்சன்

561. ந.பிச்சமூர்த்தியின் முதல் கவிதை

- காதல் (1934- மணிக்கொடி)

562. சாகித்ய அக்கதமி விருது பெற்ற சி.சு.செல்லப்பாவின் நாவல்

- சுதந்திரதாகம்

563. தண்ணீர் எனும் நாவலை எழுதியவர்

- டானியல்

564. குறட்டை ஒலி என்னும் சிறுகதையை எழுதியவர்

- மு.வரதராசன்

565. காளத்திநாதனை வேதியர் முறைப்படி பூசை செய்து வந்தவர்

- சிவகோசரியார்

566. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றை புலப்படுத்தும் குறிப்புக்கள் காணப்படும் இலக்கியம்

- பதிற்றுப்பத்து

567. முன்னூல் என்பது தொல்காப்பியம் பின்னூல் என்பது

- நன்னூல்

568. கான மஞ்ஞைக்கு கலிங்கம் நல்கிய புகழுக்குரியவன்

- பேகன்
  பாரி (முல்லைக்குத் தேர் நல்கியவர்)

569. உருவகம் என்ற வழக்கு புதுக்கவிதைகளில் எவ்வாறு வழங்கப்படுகிறது

- படிமங்கள்

570. எழுச்சிச்சான்றோர், திருப்புமுனைச் சிந்தனையாளர் என அழைக்கப்படுபவர்

- சாலை.இளந்திரையன்

571. சைவ சமயத்தின் செஞ்ஞாயிறு எனப் போற்றப்பட்டவர்

- திருநாவுக்கரசர்

571. "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என தன் கல்லறையில் எழுதச் சொன்னவர்

- ஜி.யு.போப்

572. தமிழில் வெளிவந்த முதல் உரைநடை நாடகம்

- சதிசுலோசனா

573. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகக் கருதப்படும் நூல் எது

- மணிமேகலை

574. சதுரகராதியை இயற்றியவர்

- வீரமாமுனிவர்

575. கலிங்கத்துப்பரணி நூலில் அமைந்துள்ள தாழிசைகளின் எண்ணிக்கை

- 599

576. காவடிச்சிந்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்

- சென்னிக்குளம் அண்ணாமலையார்

577. அதியமானின் தூதுவராக ஔவையார் சென்றதைக் கூறும் நூல்

- புறநானூறு

578. தண்டமிழ்ஆசான், சாத்தன் நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகளால் பாராட்டப்பட்டவர்

- சீத்தலைச் சாத்தனார்

579. வாகீசர், தர்மசேனர், தாண்டகவேந்தர் என்றெல்லாம் அழைக்கப்படுபவர்

- திருநாவுக்கரசர்

580. 1969 இல் சாகித்ய அகாதமிப் பரிசு பெற்ற பாரதிதாசனின் நாடகம்

- பிசிராந்தையார்

581. "வீறுடை செம்மொழி தமிழ் மொழி உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர் மொழி" என்று தமிழின் பெருமையை பறைசாற்றியவர்

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

582. பரிதிமாற்கலைஞர் நடத்தி வந்த ஞானபோதினி என்னும் இதழைத் தொடக்கி வைத்தவர்

- மு.சி.பூர்ணலிங்கம்

583. தொல்காப்பியத்தில் நாடகப்பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்த இயல்

- மெய்ப்பாட்டியல்

584. "திறமான புலமையெனில் அதனை மேல்நாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்" என்று கூறியவர்

- பாரதியார்

585. "கரித்துண்டு" என்ற நாவலின் ஆசிரியர்

- மு.வரதாராசன்

586. உடையார் மிடுக்கு என்ற நாடகத்தின் ஆசிரியர்

- பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை

587. சரஸ்வதி அந்தாதியை இயற்றியவர்

- கம்பர்

588. "ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லை

என்றும் நம்வாழ்விலே பஞ்சமே இல்லை" என்ற பாடலின் ஆசிரியர்

- மருதகாசி

589. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர்

- வீரமாமுனிவர்

590. "திருநெல்வேலி சரித்திரம்" என்ற வரலாற்று நூலை எழுதியவர்

- கால்டுவெல்

591. "நம்பியகப் பொருள்" என்ற நூலை எழுதியவர்

- நாற்கவிராச நம்பி

592. “சிவந்தெழுந்த பல்லவன் உலா” - எழுதியவர்

- படிக்காசுப் புலவர்

593. “முல்லை சான்ற கற்பின் மெல்லியல்” என்று கூறும் நூல்

- சிறுபாணாற்றுப்படை

594. “பத்துக் கம்பன்” (நவீன கம்பன்) என அழைக்கப்படுபவர்

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

595. “தமிழ் மொழிக்கு இலியட்டு இதுவே, ஒடிசியும் இதுவே” என்று ஜி.யு.போப் இனால் பாராட்டப்பட்ட நூல்

- சீவக சிந்தாமணி

596. “குறிஞ்சித் தேன்” என்ற நாவலின் ஆசிரியர்

- ராஜம் கிருஷ்ணன்

597. “பாலங்கள்” எனும் நாவலின் ஆசிரியர்

- சிவசங்கரி

598. “கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கிடில் கை கொட்டிச் சிரியாரோ? ” - என்று பாடியவர்

- பாரதியார்.

599. முதற் சங்கம் இருந்த இடம்

- தென் மதுரை

600. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்று கூறும் நூல்

- மணிமேகலை

601. “கவிராட்சசன்” என அழைக்கப்படுபவர்

- ஒட்டக்கூத்தர்

602. “பெண்மதி மாலை” என்ற நூலை எழுதியவர்

- வேதநாயகம் பிள்ளை

603. “உவமைக் கவிஞர்” எனப் போற்றப்படுபவர்

- சுரதா

604. “தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை” என்று பாடியவர்

- பாரதிதாசன்

605. “மான விஜயம்” என்ற நூலின் ஆசிரியர்

- பரிதிமாற் கலைஞர்

606. “காதல் எங்கே” என்ற நாடகம் எழுதியவர்

- மு.வரதராசன்

607. “தமிழ் நாட்டின் மாப்பஸான்” என அழைக்கப்படுபவர்

- புதுமைப்பித்தன்

608. “புதையல்” என்ற புதினத்தின் ஆசிரியர்

- கலைஞர் கருணாநிதி

609. “திராவிட வேதம்” என அழைக்கப்படுவது

- திருவாய் மொழி

610. “சின்னூல்” எனப் பெயர் பெற்ற நூல்

- நேமிநாதம்

611. பூச்சாண்டி என்ற சிறுகதையின் ஆசிரியர்

- அகிலன்

612. அன்பளிப்பு எனும் கதையின் ஆசிரியர்

- கு. அழகிரிசாமி

613. “ஈட்டி எழுபது” என்ற நூலைப் பாடியவர்

- ஒட்டக்கூத்தர்

614. திருவாசகம் கொண்டுள்ள பாடல்களின் எண்ணிக்கை

- 656 பாடல்கள்

615. “சுகுணசுந்தரி” என்ற நாவலின் ஆசிரியர்

- மாயூரம் வேதநாயகம்பிள்ளை.

616. “மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா” என்று கூறியவர்

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

617. “இலக்கியம்” என்ற பெயரில் இதழ் நடத்தியவர் யார்

- சுரதா

618. “கறுப்பு மலர்கள்” எனும் படைப்பின் ஆசிரியர்

- நா. காமராசன்

619. “ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே” என்று பாடியவர்

- பொன்முடியார்

620. “திருத்தி எழுதிய தீர்ப்புகள்” என்ற கவிதை நூலின் ஆசிரியர்

- வைரமுத்து

621. “திருப்புகழ்” பாடியவர்

- அருணகிரிநாதர்

622. “சதாவதானி” என அழைக்கப்படும் இஸ்லாமிய புலவர்

- செய்குதம்பிப் பாவலர்

623. “இலக்கண உலகின் ஏகசக்கரவர்த்தி” எனப்படுபவர்

- பாணினி

624. “தமிழ்க் கவிஞருள் அரசர்” என வீரமாமுனிவரால் குறிப்பிடப்பட்டவர்

- திருத்தக்கதேவர்

625. “சூடாமணி நிகண்டின் ” ஆசிரியர்

- மண்டலபுருடர்

626. “மந்திர மாலை” என்ற நூலின் ஆசிரியர்

- தத்துவப் போதக சுவாமிகள்

627. “தாமரைத் தடாகம்” என்ற நூலை எழுதியவர்

- கால்டுவெல் ஐயர்

628. இடைச்சங்கம் இருந்த இடம்

- கபாடபுரம்

629. “மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்” என்று கூறும் நூல்

- புறநானூறு

630. “உரை வீச்சு” என்ற நூலின் ஆசிரியர்

- சாலை இளந்திரையன்

631. “மண்குடிசை” எனும் நாவலை எழுதிய ஆசிரியர்

- மு. வரதராசன்

632. “தேன் மழை” எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

- சுரதா

633. “உலக மொழிகள்” என்ற நூலை எழுதியவர்

- ச.அகத்தியலிங்கம்

634. “பண்டைத் தமிழ் எழுத்துக்கள்” என்ற தலைப்பில் நூல் எழுதியவர்

- நா.சுப்பிரமணியன்

635. “செந்தமிழ்” இதழ் தொடங்கப்பட்ட ஆண்டு

- 1903

636. “நரி விருத்தம்” பாடியவர்

- திருதக்கதேவர்

637. “வேளாண்மை” எனும் காவியத்தின் ஆசிரியர்

- நீலாவணன்

638. ஆபுத்திரனுக்கு அட்சய பாத்திரம் வழங்கியவர்

- சிந்தாதேவி

639. சங்கப் புலவர்களுக்குத் தனிக் கோயில் அமைந்துள்ள இடம்

- மதுரை (மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்)

640. “தஞ்சைவாணன் கோவை” பாடியவர்

- பொய்யாமொழிப் புலவர்

641. “சீனத்துப் பரணி” பாடப்பெற்ற ஆண்டு

- 1975

642. “இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்” என்று கூறும் நூல்

- பிங்கல நிகண்டு

643. “மானிடர்க்கு என்று பேசப்படின் வாழ்கிலேன் ” எனக் கூறியவர்

- ஆண்டாள்

644. “இந்தியா” என்னும் இதழ் நடத்தியவர்

- பாரதியார்

645. பாரதிதாசனைப் “பாவேந்தர்” என்று கூறியவர்

- தந்தை பெரியார்

646. “காந்தியக் கவிஞர் ” எனப்படுபவர்

- நாமக்கல். வே. இராமலிங்கம் பிள்ளை

647. “மாடும் கயிறு அறுக்கும்” எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

- முருகையன்

648. “மாங்கனி” என்ற குறுங்காவியத்தை இயற்றியவர்

- கண்ணதாசன்

649. “சோழ நிலா” என்ற நாவலை எழுதியவர்

- மு. மேத்தா

650. 1999 -ஆம் ஆண்டு சாகித்ய அகாதமிப் பரிசு பெற்ற கவிதை நூல்

- ஆலாபனை

651. “சின்ன சங்கரன் கதை” எழுதியவர்

- பாரதியார்

652. “வீடும் வெளியும்” என்ற நாவலின் ஆசிரியர்

- வல்லிக்கண்ணன்

653. “கல்கி” எழுதிய முதல் நாவல்

- விமலா

654. தமிழில் பாரதம் பாடியவர்

- வில்லிபுத்தூரார்

655. “குலோத்துங்கன்” என்ற பெயரில் கவிதை எழுபதுவர்

- வ.செ. குழந்தைசாமி

656. திருக்குருகைப் பெருமாள் கவிராயரின் இயற்பெயர்

- சடையன்

657. “ஓர் ஆயிரம் கோடி எழுதாது தம் மனத்து எழுதிப் படித்த விரகன்” எனக் கூறிக் கொண்டவர்

- அந்தகக் கவி வீரராகவ முதலியார்

658. அகநானூற்றின் நூல் முழுமைக்கும் உரை எழுதியவர்

- இரா.வேங்கடாசலம்பிள்ளை

659. அகப்பொருள் பாடுவதற்கேற்ற சிறந்த யாப்பு வடிவங்கள்

- கலிப்பா, பரிபாடல்

660. அடிக்குறிப்புகளால் சிறப்புப் பெற்ற நூல்கள்

- ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து

661. அரகேசரி என அழைக்கப்படும் மன்னன்

- நின்றசீர் நெடுமாறன்

662. “புலவர் புராணம்” பாடியவர்

- தண்டபாணி சுவாமிகள்

663. “என் சரிதம்” எழுதியவர்

- உ.வே.சாமிநாதையர்

664. “கோகிலாம்பாள் கடிதங்கள்” எனும் நாவலை எழுதியவர்

- மறைமலையடிகள்

665. “அம்மா வந்தாள்” எனும் நாவலை எழுதியவர்

- தி.ஜானகிராமன்

666. “சிறுகதை மஞ்சரி” என்ற சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர்

- எஸ். வையாபுரிப் பிள்ளை

667. “அலி பாதுஷா” நாடகம் எழுதியவர்

- வண்ணக் களஞ்சியப் புலவர்

668. “ஞானக்குறள்” என்ற நூலின் ஆசிரியர்

- ஔவையார்

669. “சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத் தமிழ்” பாடியவர்

- படிக்காசுப் புலவர்

670. “வஞ்சிமா நகரம்” எனும் ஆராய்ச்சி நூலை எழுதியவர்

- இரா. இராகவையங்கார்

671. “நெஞ்சக்கனல்” நாவலின் ஆசிரியர்

- நா. பார்த்தசாரதி

672. “தமிழர் மதம்” என்ற நூலின் ஆசிரியர்

- மறைமலையடிகள்

673. “புலவர் கண்ணீர்” எனும் நூலை எழுதியவர்

- மு. வரதராசன்

674. “பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்” என்று கூறும் நூல்

- கலித்தொகை

675. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனப் பாடியவர்

- கணியன் பூங்குன்றனார்

676. “தமிழன் இதயம்” என்ற நூலினை எழுதியவர்

- நாமக்கல் கவிஞர்

677. “ஜோதி” என்ற புனைப்பெயரில் எழுதியவர்

- கி.வா. ஜகந்நாதன்

678. “இராவண காவியம்” எழுதியவர்

- புலவர் குழந்தை

679. “கொடி முல்லை” என்ற கவிதை நூலின் ஆசிரியர்

- வாணிதாசன்

680. “காந்தி மகான் கதை” எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

- கொத்தமங்கலம் சுப்பு

681. “செந்தாமரை” என்ற நாவலின் ஆசிரியர்

- மு. வரதராசன்

682. “கடைதிறப்பு” எனும் கவிதைத் தொகுப்பை எழுதியவர்

- முருகுசுந்தரம்

683. “திருஞானசம்பந்தர் கால நிச்சயம்” என்ற நூலினை எழுதியவர்

- பெ. சுந்தரம்பிள்ளை

684. கவிஞர் துறைவனின் இயற்பெயர்

- எஸ். கந்தசாமி

685. “ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே” என்று பாடியவர்

- அப்பர் (திருநாவுக்கரசர்)

686. “நீதி தேவன் மயக்கம்” எனும் நூலினை எழுதியவர்

- அறிஞர் அண்ணா

687. “தேரோட்டியின் மகன் ” என்ற நாடகத்தின் ஆசிரியர்

- பி. எஸ். ராமையா

688. “காணாமலே காதல்” எனும் சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர்

- கு.ப. ராஜகோபாலன்

689. “ஒற்றை ரோஜா” எனும் சிறுகதையின் ஆசிரியர்

- கல்கி

690. தமிழ் நாட்டின் “வால்டர் ஸ்காட்டு” என அழைக்கப்படுபவர்

- கல்கி

691. “செம்பியன் செல்வி” என்ற நாவலின் ஆசிரியர்

- கோவி. மணிசேகரன்

692. பாவகைகளும் அதன் ஓசைகளும்

- வெண்பா - செப்பல்
- ஆசிரியப்பா - அகவல்
- கலிப்பா – துள்ளல்
- வஞ்சிப்பா – தூங்கல்

693. "குறிஞ்சிக் கிழவன்" எனக் குறிக்கப்படுபவர்

- முருகன்

694. பரிபாடலுக்குப் பண்ணிசைத்தவர்களின் எண்ணிக்கை

- 10

695. "சேயோன்" எனக் குறிக்கப்படுபவர்

- முருகன்

696. வேங்கையின் மைந்தன் எனும் நாவலின் ஆசிரியர்

- அகிலன்

697. "காளக்கவி" என அழைக்கப்படுபவர்

- ஒட்டக்கூத்தர்

698. அறுவகை இலக்கணம் எழுதியவர்

- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

699. உரையாசிரியர்கள் காலம் எனப்படுவது

- 13 -ஆம் நூற்றாண்டு

700. சேரமான் பெருமாள் நாயனார் பாடிய அந்தாதி நூல்

- பொன் வண்ணத்தந்தாதி

701. நன்னூல் எழுதப் பெற்ற காலம்

- 13-ஆம் நூற்றாண்டு

702. "அரும்பைத் தொள்ளாயிரம் " என்ற நூலைப் பாடியவர்

- ஒட்டக்கூத்தர்

703. "கவிராஜன் கதை"யின் ஆசிரியர்

- வைரமுத்து

704. "நெஞ்சுக் கலம்பகம்" பாடியவர்

- புகழேந்திப் புலவர்

705. பாரத அன்னைத் திருப்பள்ளி எழுச்சியைப் பாடியவர்

- பாரதியார்

706. அடியார்க்கு நல்லாரை ஆதரித்தவர்

- பொப்பன்ன காங்கேயன்

707. தண்டியலங்காரத்தின் மூல நூல்

- காவ்யதர்சனம்

708. "நற்கருணைத் தியானமாலை" எனும் நூலின் ஆசிரியர்

- கால்டுவெல்

709. "மரத்தை மறைத்தது மாமத யானை" எனப் பாடியவர்

- திருமூலர்

710. "சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் " என்ற கவிதை நூலின் ஆசிரியர்

- நா. காமராசன்

711. "ஏழை படும்பாடு" என்ற நாவலின் ஆசிரியர்

- சுத்தானந்த பாரதியார்

712. உ.வே.சா.வின் ஆசிரியர்

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

713. "வேத உதாரணத் திரட்டு" என்ற நூலின் ஆசிரியர்

- இரேனியஸ்

714. சர்வ சமய சமரசக் கீர்த்தனையைப் பாடியவர்

- வேதநாயகம் பிள்ளை

715. "பில்கிரிம்ஸ் புரோக்ரஸ்" என்ற நூலின் மொழிபெயர்ப்பு நூல்

- இரட்சணிய யாத்திரிகம்

716. "தினவர்த்தமானி" என்னும் வார இதழ் நடத்தியவர்

- பெர்சிவல் பாதிரியார்

717. பத்தாம் திருமுறை எனப்படுவது

- திருமந்திரம்

718. புனிதவதியார் எனும் இயற்பெயர் கொண்டவர்

- காரைக்கால் அம்மையார்

719. “ஊசிகள்” என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

- மீரா

720. நாமக்கல் கவிஞர் எழுதிய சுயசரிதையின் பெயர்

- என்கதை

721. “காவியம்“ என்ற இதழை நடத்தியவர்

- சுரதா

722. “உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” எனப் பாடியவர்

- திருமூலர்

723. “வரபதி ஆட்கொண்டான் ” என்ற மன்னனின் அவைக்களப் புலவராக இருந்தவர்

- வில்லிபுத்தூரார்

724. தரங்கம்பாடியில் அச்சுக்கூடம் நிறுவியவர்

- சீகன் பால்கு

725. “தசரதன் குறையும் கைகேயி நிறையும்” எனும் நூலை எழுதியவர்

- சோமசுந்தர பாரதியார்

726. “கோவூர் கிழார்“ என்ற நூலின் ஆசிரியர்

- கு. திருமேனி

727. “ஞானசாகரம்” என்ற இதழை நடத்தியவர்

- மறைமலையடிகள்

728. “பணவிடு தூது” எனும் நூலைப் பாடியவர்

- சரவணப் பெருமாள் கவிராயர்

729. “கற்பனைக் களஞ்சியம்” என்று அழைக்கப்படுபவர்

- சிவப்பிரகாச சுவாமிகள்

730. “தணிகைப் புராணம்” பாடியவர்

- கச்சியப்ப முனிவர்

731. “பல்கலைச் செல்வர்” எனப் போற்றப்படுபவர்

- தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

732. “குணங்குடி மஸ்தான்” என்பவரின் இயற்பெயர்

- சுல்தான் அப்துல் காதிறு

733. இராமலிங்க அடிகளின் பாடல் தொகுப்பிற்குரிய பெயர்

- திருவருட்பா

734. “திருச்சீரலைவாய்” என அழைக்கப்பெறும் ஊர்

- திருச்செந்தூர்

735. அம்பிகாபதிக் கோவையைப் பாடியவர்

- அம்பிகாபதி

736. “மேருமந்திர புராணம்” எனும் நூலை எழுதியவர்

- வாமனாசாரியார்

737. “தமிழ் வியாசர்” என அழைக்கப்படுபவர்

- நம்பியாண்டார் நம்பி

738. “திருக்கண்ணப்ப தேவர் திருமறம் ” என்ற நூலின் ஆசிரியர்

- கல்லாடர்

739. “அறநெறிச் சாரம்” என்ற நூலை எழுதியவர்

- முனைப்பாடியார்

740. “முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை” என்று கூறும் நூல்

- தொல்காப்பியம்

741. வண்ணக்களஞ்சியப் புலவரின் இயற்பெயர்

- முகம்மது இபுராகிம்

742. “நாகநாட்டரசி” எனும் நாவலை எழுதியவர்

- மறைமலையடிகள்

743. “முருகன் அல்லது அழகு” என்ற நூலை எழுதியவர்

- திரு.வி.க.

744. “பெண் புத்தி மாலை” என்ற நூலை எழுதியவர்

- முகமது உசைன் புலவர்

745. “ஏசுநாதர் சரித்திரம்” என்ற நூலின் ஆசிரியர்

- தத்துவ போதக சுவாமிகள்

746. “ஜீவ காருண்யம்” என்பதோடு தொடர்புடைவர்

- வள்ளலார்

747. “வைதாலும் வழுவின்றி வைவாரே” எனக் குறிக்கப்படுபவர்

- ஆறுமுக நாவலர்

748. தொல்காப்பியம் குறிக்கும் உரிப்பொருள்

- ஒழுக்கம்

- **ஐவகை நிலங்களும் அவற்றிற்குரிய பொழுதுகளும்**

| **நிலம்** | **பெரும் பொழுது** | **சிறு பொழுது** | **வாழும் மக்கள்** |
|---|---|---|---|
| 749. குறிஞ்சி (மலை) | கூதிர், முன்பனி | யாமம் | குறவர் |
| 750. முல்லை (காடு) | கார் | மாலை | ஆயர் |
| 751. மருதம் (வயல்) | கார்காலம் முதலான ஆறும் | வைகறை | உழவர் |
| 752. நெய்தல் (கடல்) | கார்காலம் முதலான ஆறும் | எற்பாடு | பரதர் |
| 754. பாலை (மணல்) | வேனில், பின்பனி | நண்பகல் | எயினர் |

755. "கும்பமுனி", "தமிழ்முனி" எனப்படுபவர்

- அகத்திய முனிவர்

756. தொல்காப்பிய இயல்களின் மொத்த எண்ணிக்கை

- 27

எழுத்ததிகாரம் (09 இயல்கள்)

சொல்லதிகாரம் (09 இயல்கள்)

பொருளதிகாரம் (09 இயல்கள்)

757. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தைப் பாடியவர்

- குமட்டூர்க் கண்ணனார்

758. "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற நூலின் ஆசிரியர்

- திரு.வி.க

759. "நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்" என்று பாடியவர்

- பாரதியார்

760. "கொடி மரத்தின் வேர்கள்" எனும் கவிதைத் தொகுப்பை எழுதியவர்

- வைரமுத்து

761. "கலைஞன் தியாகம்" எனும் சிறுகதைத் தொகுப்பை எழுதியவர்

- கி.வா. ஜகந்நாதன்

762. "47 நாட்கள்" எனும் நாவலை எழுதியவர்

- சிவசங்கரி

763. “சொல்லும் அவற்றின் குறியீடும்” எனும் நூலை எழுதியவர்

- ரா.பி. சேதுப்பிள்ளை

764. உ.வே.சா.வின் இயற்பெயர்

- வெங்கட்ராமன்

765. “மறைந்து போன தமிழ் நூல்கள்” எனும் நூலை எழுதியவர்

- மயிலை. சீனி வேங்கடசாமி

766. “சைவக் கண்கள்” எனும் நூலை எழுதியவர்

- ஜி.எம். முத்துசாமிப்பிள்ளை

767. தேம்பாவணி அரங்கேற்றப்பட்ட இடம்

- மதுரை

768. கம்பராமாயணத்தை முதன் முதலில் பதிப்பித்தவர்

- திரு.வேங்கடாசல முதலியார்

769. “பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்” என்ற நூலின் ஆசிரியர்

- ஜெகவீர பாண்டியர்

770. “பிறந்ததெப்படியோ” என்ற நூலை எழுதியவர்

- தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

771. “சிறு முதுக்குறைவி” என அழைக்கப்படுபவர்

- கண்ணகி

772. நன்னூலுக்கு மயிலை நாதர் எழுதிய உரையின் பெயர்

- மயிலைநாதம்

773. “ஆசாரிய ஹிருதயம்” எனும் நூலின் ஆசிரியர்

- அழகிய மணவாளர்

774. “நண்டும் தும்பியும் நான்கறி வினவே” என்று கூறும் நூல்

- தொல்காப்பியம்

775. “உள்ளத்தே உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்” என்று பாடியவர்

- பாரதியார்

776. சங்க கால ஐவகைத் தூய ஒழுக்கத்தினுள் அடங்காதவை

- கைக்கிளை, பெருந்திணை

777. ஐவகை நிலங்களும் புறத்திணை ஒழுக்கங்களும்

- குறிஞ்சி - வெட்சி
- முல்லை - வஞ்சி
- மருதம் - உழிஞை
- நெய்தல் - தும்பை
- பாலை - வாகை

778. தேவருலகத்திலிருந்து பூவுலகிற்குக் கரும்பு கொணர்ந்த பரம்பரையைச் சார்ந்தவன்

- அதியமான்

779. "வளைக்கரம்" எனும் நாவலின் ஆசிரியர்

- ராஜம் கிருஷ்ணன்

780. "பெரியபுராண ஆராய்ச்சி" என்ற நூலை எழுதியவர்

- டாக்டர் இராசமாணிக்கனார்

781. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

- கா. கோவிந்தன்

782. "முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்" குறிக்கும் திணை

- உழிஞைத் திணை

783. "ஊரும் பேரும்" என்ற நூலின் ஆசிரியர்

- ரா.பி.சேதுப்பிள்ளை

784. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகளின் எண்ணிக்கை

- எட்டு (நகை,அழுகை,இளிவரல்,மருட்கை,அச்சம்,பெருமிதம்,வெகுளி,உவகை)

785. அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராய் இருந்தவர்

- மாணிக்கவாசகர்

786. தமிழக அரசவைக் கவிஞராக இருந்தவர்

- நாமக்கல் கவிஞர்

787. அகப்பாடல்களில் அதிகமான வரலாற்றுக் குறிப்புகளைக் குறிப்பிடும் புலவர்

- பரணர்

788. "தென்றமிழ்த் தெய்வப் பரணி" என ஒட்டக்கூத்தர் குறிப்பிடும் நூல்

- கலிங்கத்துப் பரணி

789. "மூதுரை" நூலுக்கு வழங்கும் வேறுபெயர்

- வாக்குண்டாம்

790. “உரிச்சொல் நிகண்டு” எழுதியவர்

- காங்கேயர்

791. “நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் ” என்று கூறும் நூல்

- புறநானூறு

792. “மோகமுள்” எனும் நாவலை எழுதியவர்

- தி.ஜானகிராமன்

793. “தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்று பாடியவர்

- பாரதியார்

794. விபுலானந்தரின் இயற்பெயர்

- மயில்வாகனன்

795. “தமிழ்ச்சுடர் மணிகள்” என்ற நூலின் ஆசிரியர்

- எஸ். வையாபுரிப்பிள்ளை

796. திராவிடமொழிகளைத் திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள் என்று பகுத்தவர்

- கால்டுவெல்

797. “கண்ணீர் பூக்கள்” கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

- மு. மேத்தா

798. “பாண்டிக்கோவை” என்ற நூலின் பாட்டுடைத் தலைவன்

- நெடுமாறன்

799. திரிகூடராசப்ப கவிராயர் எழுதிய உலா நூல்

- திருக்குற்றால நாதர் உலா

800. அந்தகக் கவிராயர் எழுதிய உலா நூல்

- திருவாரூர் உலா

801. நன்னூலார் குறிப்பிடும் நூலிற்கான குற்றங்களின் எண்ணிக்கை

- பத்து

802. அந்தம் முதலாய்த் தொடுப்பது எவ்வாறு அழைக்கப்படும்

- அந்தாதி

803. “தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா” என்று பாடிய கவிஞர்

- நாமக்கல் கவிஞர்

804. இளங்கோவடிகள் குறிப்பிடும் காப்பியக் குறிக்கோளின் எண்ணிக்கை

- மூன்று

805. “தென்னவன் பிரமராயன்” என்ற விருதுப் பெயர் பெற்றவர்

- மாணிக்கவாசகர்

806. “களத்து” என்ற சொல்லைக் கொண்டு முடியும் நூல்

- களவழி நாற்பது

807. “கயிலைக் கலம்பகம்” பாடியவர்

- குமரகுருபரர்

808. “உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்” என்று பாடியவர்

- பாரதியார்

809. “சிவப்பு ரிக்ஷா” எனும் சிறுகதையின் ஆசிரியர்

- தி. ஜானகிராமன்

810. “பண்” வகுக்கப் பெற்ற சங்க நூல்

- பரிபாடல்

811. இயற்பா, இசைப்பா எனப் பிரிக்கப்பட்டிருப்பது

- நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

812. “ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப” என்ற நூற்பாவுடன் தொடர்புடைய இலக்கியம்

- உலா

813. தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துக்களின் எண்ணிக்கை

- மூன்று (குற்றியலிகரம்,குற்றியலுகரம்,ஆய்தம்)

814. “பெத்லெகம் குறவஞ்சி” எனும் நூலை எழுதியவர்

- வேதநாயக சாஸ்திரியார்

815. “மலைக்கள்ளன்” என்ற நாவலின் ஆசிரியர்

- நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை

816. “ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்” என்ற நூலின் ஆசிரியர்

- மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை

817. “இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல” எனும் கவிதையின் ஆசிரியர்

- வைரமுத்து

818. காரிகை எனப் பெயர் பெறும் யாப்பு வகை

- கட்டளைக் கலித்துறை

819. கிரவுஞ்சம் என்பது

- பறவை

820. தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலக்கட்டங்களை வகுத்த ஈழத்து முன்னோடி

- சி.வை.தாமோதரப்பிள்ளை

821. “உண்பது நாழி உடுப்பவை இரண்டே” எனப் பாடியவர்

- நக்கீரர்

822. “அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருள்” என்ற தொல்காப்பிய சூத்திரத்திற்கு அமைய கூறப்படும் முப்பொருள்

- அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்

823. “உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் - சிலப்பதிகாரம்” இதில் உரைநடைத் தன்மை வெளிப்படும் பகுதிகள் இரண்டினைக் குறிப்பிடுக

- ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை

824. தமிழ் மொழிக்கும், வட மொழிக்கும் பொதுவாயுள்ள பாவகை

- விருத்தப்பா

825. “19 ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை எழுந்து நடக்கத் தொடங்கியது” எனக் கூறியவர்

- பேராசிரியர்.க.கைலாசபதி

826. “வசன நடையில் கைவந்த வல்லாளர்” என வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியால் பாராட்டப்பட்டவர்

- ஆறுமுகநாவலர்

827. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளை எவ்வாறு அழைப்பர்

- புருடார்த்தங்கள்

828. “ரூபைய்யாத்” எனும் பாரசீக காப்பியத்தின் ஆசிரியர்

- உமர்கையாம்

829. அகராதியின் தோற்றத்திற்கு முன் பொருளறிய உதவிய நூல்

- நிகண்டு

830. “விஷ்ணுபுரம்” என்ற நாவலின் ஆசிரியர்

- ஜெயமோகன்

831. “உறவு” என்ற பிரபல கவிதையை எழுதியவர்

- நீலாவணன்

832. “குயில்” எனும் கவிதை வடிவில் ஒரு திங்கள் இதழை நடத்தி வந்தவர்

- பாரதிதாசன்

833. “கரிசல் இலக்கியத்தின்” தந்தை என கருதப்படுபவர்

- கி. ராஜநாராயணன்

834. “ஈழநாட்டு தமிழ்ப்புலவர் சரிதம்” என்ற நூலின் ஆசிரியர்

- வித்துவான் சி.கணேசையர்

835. முக்கிய சில நூல்களும் அவற்றை எழுதியவர்களும்

- தமிழ்ப் புளுடாக் :- சைமன் காசிச்செட்டி
- தமிழ் புலவர் சரிதம்:- சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர்
- தமிழ் பாஷை :- தி.த. சரவணமுத்துப்பிள்ளை
- தமிழ் மொழியின் வரலாறு :- வி.கோ. சூரியநாராயண சாத்திரிகள்
- நியாய இலக்கணம்:- நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை

836. இராமாயணம் உத்தர காண்டத்தைப் பாடியவர்

- ஒட்டக்கூத்தர்

837. சங்க இலக்கியங்களில் செவிலி என்ற சொல் குறிப்பது

- வளர்ப்புத் தாய்

838. “ஆடி பிறப்புக்கு நாளை விடுதலை” என்ற பாடலை இயற்றியவர்

- நாவலியூர் சோமசுந்தரப் புலவர்

839. ஈழத்து ஆசுகவியின் இயற்பெயர்

- கல்லடி வேலுப்பிள்ளை

840. கே.டேனியல் எழுதிய முதலாவது நாவல்

- பஞ்சமர்

841. முதலாவது உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற்ற இடம்

- கோயம்புத்தூர்

842. கல்கி என்ற புனைக்கதை எழுத்தாளரின் இயற்பெயர்

- ரா. கிருஷ்ணமூர்த்தி

843. “கவிராஜன் கதை” என்ற கவிதை நூலைப் பாடியவர்

- வைரமுத்து

844. “ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்” இந்தப் பாடலடி இடம்பெற்ற நூலும் அதனை எழுதியவரும்

- உலகநீதி - உலகநாதப் பண்டிதர்

845. “கள்வனின் காதலி” என்ற நாவலின் ஆசிரியர்

- கல்கி

846. கண்ணனைக் காதலியாக நினைத்துப் பாடல் பாடியவர்

- பாரதியார்

847. 1963 இல் சாகித்ய பரிசு பெற்ற வரலாற்று நாவல்

- வேங்கையின் மைந்தன்

848. கச்சி என அழைக்கப்படும் ஊர்

- காஞ்சிபுரம்

849. "அன்னை அழுங்கல் அந்தாதி" பாடியவர்

- வீரமாமுனிவர்

850. உமர்கய்யாம் பாடல்களை தமிழில் மொழிப்பெயர்த்தவர்

- கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

851. "கனவுக் குதிரைகள்" எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

- மு. மேத்தா

852. "தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம் " எனும் நூலை எழுதியவர்

- எஸ்.வையாபுரிப் பிள்ளை

853. "நடுவன் ஐந்திணை" குறிக்கும் திணை

- பாலைத் திணை

854. முதன் முதலில் தாலாட்டுப் பாடிய ஆழ்வார்

- நம்மாழ்வார்

855. புறநானூற்றை முதன் முதலில் பதிப்பித்தவர்

- உ.வே. சாமிநாதையர்

856. அருட்பா, மருட்பா என வாதிட்டவர்

- ஆறுமுகநாவலர்

857. "கூடல்" என அழைக்கப்பெறும் ஊர்

- மதுரை

858. "தமிழ் இதழ்களின் தந்தை" எனப்படுபவர்

- ஜி.சுப்பிரமணிய ஐயர்

859. கற்போடு தொடர்புடைய பூ

- முல்லை

860. “கம்பரசம்” என்ற நூலை எழுதியவர்

- அறிஞர் அண்ணா

861. “குமரகுருபரன்” என்ற இதழை வெளியிடுவோர்

- திருப்பனந்தாள் மடம்

862. வேப்பம் பூமாலைக்கு உரியவர்

- பாண்டியர்

863. மணிப்பிரவாள நடையை வளர்த்தவர்கள்

- சமணர்கள்

864. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை எழுதியவர்

- மறைமலையடிகள்

865. நெல்லை சிலேடை வெண்பா எழுதியது

- சுப்ரமணிய முதலியார்

866. “இதய சிறையில்” என்ற சிறுகதையின் ஆசிரியர்

- அகிலன்

867. “தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்” என்று கூறும் நூல்

- சிலப்பதிகாரம்

868. உதயகுமாரனின் (மணிமேகலை) முற்பிறப்புப் பெயர்

- இராகுலன்

869. தமிழ் செம்மொழி ஆக்கப்பட்ட ஆண்டு

- 2004

870. கோவலனின் முற்பிறப்புப் பெயர்

- பரதன்

871. “தமிழர் சால்பு” எனும் நூலின் ஆசிரியர்

- சு.வித்தியானந்தன்

872. “நாவலும் வாழ்க்கையும்” எனும் நூலை எழுதியவர்

- கா.சிவத்தம்பி

873. “பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்” எனும் நூலின் ஆசிரியர்

- க.கைலாசபதி

874. “தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும்” எனும் நூலை எழுதியவர்

- ஆ. வேலுப்பிள்ளை

875. “கவிதை நயம்” எனும் நூலை எழுதியவர்கள்

- க.கைலாசபதி
- இ.முருகையன்

876. “இலக்கணத் தெளிவு” எனும் நூலின் ஆசிரியர்

- சொக்கலிங்கம்

877. “மொழியும் இலக்கணமும்” எனும் நூலை எழுதியவர்

- எம்.ஏ நு.ஃ.மான்

878. “இலக்கணமும் சமூக உறவுகளும்” எனும் நூலின் ஆசிரியர்

- கா. சிவத்தம்பி

879. தமிழில் எழுத்து, சொல் ஆகிய இலக்கணங்களை மாத்திரம் கூறும் இலக்கண நூல்கள்

- நன்னூல், நேமிநாதம்

880. “சந்திர ஓடம் வான்கடலில் நீந்தியது” இதில் வந்த அணி

- உருவக அணி

881. சார்பெழுத்துக்களின் எண்ணிக்கை

- பத்து

882. உயிர் நெடிலாய் வரும் எழுத்துக்கள்

- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

883. குற்றெழுத்து என்பது

- ஒலி அமைப்பிலே குறுகிய ஓசையுடைய எழுத்துக்கள் குற்றெழுத்து எனப்படும்.

884. மெய்யெழுத்துக்களின் வகைப்பாடு

- வல்லினம் (க்,ச்,ட்,த்,ப்,ற்)
- மெல்லினம் (ங்,ஞ்ண்,ந்,ம்,ன்)
- இடையினம் (ய்,ர்,ல்,வ்,ழ்,ள்)

885. வினா எழுத்துக்கள்

- ஆ,எ,ஏ,ஓ,யா

886. சுட்டுப்பொருள் உணர்த்தும் எழுத்துக்கள்

- அ, இ, உ

887. மெய்ம்மயக்கத்தின் வகைகள்

- இரண்டு

உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம்.

888. வேற்றுமை என்பது

- ஒரு பெயர்ச்சொல் பயனிலை கொண்டு முடியும் போது பொருளுக்கேற்பத் தன் அமைப்பில் ஏற்படுத்தும் மாறுபாடு வேற்றுமை ஆகும்.

**வேற்றுமையின் வகைகள்**

| **வேற்றுமை** | **உருபு** | **பொருள்** | **வேறு பெயர்** |
|---|---|---|---|
| 889.முதலாம் வேற்றுமை | - | பயனிலை ஏற்றல் | எழுவாய் வேற்றுமை |
| 890.இரண்டாம் வேற்றுமை | ஐ | ஆக்கல்,அழித்தல்,அடைதல், ஒத்தல்,உடைமை | செயப்படுபொருள் வேற்றுமை |
| 891.மூன்றாம் வேற்றுமை | ஆல்,ஆன்,ஒடு,ஓடு | கருவி,கருத்தா,உடனிகழ்ச்சி | - |
| 892.நான்காம் வேற்றுமை | கு | கொடை,பகை,நட்பு,முறை,தகுதி, அதுவாதல்,பொருட்டு,எல்லை | - |
| 893.ஐந்தாம் வேற்றுமை | இல்,இன் | நீங்கல்,இல்லை,ஏது,ஒப்பு | - |
| 894.ஆறாம் வேற்றுமை | அது,ஆது,அ | தற்கிழமை,பிறிதின்கிழமை | - |
| 895.ஏழாம் வேற்றுமை | கண் | இடம்,காலம் | - |
| 896.எட்டாம் வேற்றுமை | - | விளித்தல் பொருள் | விளி வேற்றுமை |

897. தற்கிழமையின் வகையும் உதாரணமும்

- ஐந்து
  பண்பு - செழியனது கருமை
  உறுப்பு - யானையது தந்தம்
  ஒன்றன் கூட்டம் - ஆட்டு மந்தை
  பலவின் கூட்டம் - பறவைகளது கூட்டம்
  திரிபின் ஆக்கம் - நெல்லினது அவல்

898. கல், நில், வெண், தண் இவற்றில் தெரிநிலை, குறிப்பு வினையடியினை வேறுபடுத்தி எழுதுக

- தெரிநிலை - கல், நில்
- குறிப்பு - வெண், தண்

899. நட, படி, ஓடு, வெட்டு இவற்றில் செயற்படுபொருள் குன்றிய வினையடி

- நட, ஓடு

900. அது தூங்கியது, அது தூக்கியது இங்கு தூங்கியது, தூக்கியது எவ்வகை வினைகள்

- அது தூங்கியது - தன்வினை
- அது தூக்கியது - பிறவினை

901. வியங்கோள் வினை என்பதும், அதற்கான உதாரணமும்

- வியங்கோள் வினையும் ஏவல் வினையைப் போன்றே அமையும். ஆனால் க, இய, இயர், அட்டும் என்கின்ற வியங்கோள் விகுதியைப் பெற்று வரும்.
  க - வாழ்க
  இய - வாழிய
  இயர் - வாழியர்
  அட்டும் - வாழட்டும்

902. தமிழில் தொகை வகைகள்

- ஆறு
  உவமைத்தொகை (பவள வாய்)
  உம்மைத்தொகை (இராப்பகல்)
  வேற்றுமைத்தொகை (வீடு கட்டினான்)
  பண்புத்தொகை (செங்கதிர்)
  வினைத்தொகை (கடி நாய்)
  அன்மொழித்தொகை (பூங்குழல்)

903. தொல்காப்பியத்தில் உள்ள நூற்பாக்கள் எத்தனை

- 1610

904. தமிழின் முதல் இலக்கண நூலும் அதன் ஆசிரியரும்

- அகத்தியம் (அகத்தியர்)

905. மாறன் அலங்காரம் என்ற நூலின் இலக்கண வகை

- அணி

906. நம்பியகப்பொருள் எழுதப்பட்ட நூற்றாண்டு

- 13 ஆம் நூற்றாண்டு

907. வீரசோழியம் என்னும் நூலின் உரையாசிரியர்

- பெருந்தேவனார்

908. முத்துவீரியம் எனும் நூலின் உரையாசிரியர்

- திருப்பாற்கடல்நாதன் கவிராஜர்

909. சிதம்பரப் பாட்டியல் என்னும் நூலை எழுதியவர்

- பரஞ்சோதியார்

910. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை எனும் நூல்களின் உரையாசிரியர்

- குணசாகரர்

911. தமிழ்நெறி விளக்கம் என்னும் நூலில் அடங்கும் நூற்பாக்கள்

- 25

912. இலக்கணக்கொத்தை எழுதியவர்

- சாமிநாததேசிகர்

913. பிரயோக விவேகம் என்னும் நூலின் உரையாசிரியர்

- சுப்ரமணியதேசிகர்

914. சாமிநாதம் என்னும் நூலை எழுதியவர்

- சாமிகவிராசர்

915. சிதம்பரச் செய்யுட்கோவை எழுதியவர்

- குமரகுருபரர்

916. முதல் எழுத்து என்பது

- மொழிக்கு முதன்மையாக வருகின்ற மூல ஒலியன்களே முதல் எழுத்து எனப்படும்.

917. தாமே தனித்து நின்ற இயங்காது உயிரோடு சேர்ந்து இயங்கும் ஆற்றல் படைத்த எழுத்துக்கள்

- மெய் எழுத்துக்கள்

918. குற்றியலுகரம் என்பது

- "உ"கரம் தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பதாகும்.

919. முற்றியலுகரத்தின் மாத்திரை எத்தனை

- ஒன்று

920. ஐகாரக்குறுக்கம் தோன்றும் மூன்று இடங்களும் அதற்கான உதாரணங்களும்

- மொழிமுதல் - ஐந்து
- மொழியிடை - நிறைவு
- மொழிகடை - அன்னை

921. மகரக்குறுக்கம் என்பது

- னகர,ணகரங்களை அடுத்து வருகின்ற மகரங்களும் வகரத்தின் முன்னால் வருகின்ற மகரமும் மகரக்குறுக்கம் எனப்படும்.

922. மு.்.டீது என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக

- முள் + தீது

923. தமிழில் உள்ள குறில் எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை

- 95

924. உயிரளபெடை என்பது

- செய்யுளிலே ஓசை குறையுமிடத்து நெட்டுயிர்கள் சொல்லின் முதல்,இடை,கடை நிலைகளில் தமக்குரிய இரண்டு மாத்திரையை விட நீண்டொழித்தலாகும்.
  உ-ம் :- ஓஒதல் வேண்டும்

925. சந்தியக்கர (கூட்டுயிர்) எழுத்துக்கள்

- ஐ, ஔ

926. ஈரிதழ் ஒலிகள்

- ப், ம்

927. “புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான வெள்ளை அறிக்கை விரைவில் வெளிவர உள்ளது” இங்கு வெள்ளை அறிக்கை குறிக்கும் பெயர்

- கூட்டுப்பெயர்

928. பெயர்சொல்லின் வகைகள்

- காரணப் பெயர் (பறவை)
- இடுகுறிப் பெயர் (நிலம்)
- காரண இடுகுறிப் பெயர் (நாற்காலி)

929. இறந்தகால இடைநிலைகள்

- த், ட், ற், இன்

930. நடந்தான் இதில் உள்ள விகாரம்

- நட + த்(ந்) + த + ஆன்

931. தமிழில் உள்ள மூல ஒலிகளின் எண்ணிக்கை

- 30

932. “பாண்டவர்க்கு தூது சென்றவனைக் கண்டேன்” இங்கு சென்றவனை என்பது

- வினையாலணையும் பெயர்

933. “இராவணனுக்கெதிரி இராமன்” இவ்வாக்கியம் உணர்த்தும் பொருள்

- பகை

934. பாகன் யானையால் கொல்லப்பட்டான் என்பது

- செயற்பாட்டு வினை

935. சிறப்புப் பெயர் என்பது

- ஒரு பொருளுக்கே சிறப்பாக வழங்கி வருவதாகும்.

    உ - ம் :- கிளி

936. “நீ வீட்டுக்கு வந்தால் பணம் தருவேன்” என்பதில் வந்தால் என்பது

- நிபந்தனை வினையெச்சம்

937. சொல்லின் இயல்பு பற்றிய வகை

- இயற்சொல்
- திரிசொல்

- திசைச்சொல்
- வடசொல்

938. தலைமைத்தொடரும் சார்புத்தொடரும் இணைந்து வரும் வாக்கியம்

- கலப்பு வாக்கியம்

939. “அப்பா வந்தார் என்று தம்பி சொன்னான்” இதில் நிரப்பித் தொடராக அமைவது

- தம்பி

940. ஒரு சொல்லின் உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைவது

- இயல்புப் புணர்ச்சி

941. “பச்சைப்பசேல்” என்பது

- அடுக்கிடுக்குத்தொடர்

942. “கலகல” என்பது

- இரட்டைக்கிழவி

943. “ஈடும் எடுப்பும்” என்பது

- இணைமொழித்தொடர்

944. இலக்கணம் என்பது

- ஒரு மொழியின் ஆக்கக்கூறுகளை பொருள் தரும் வகையில் ஒன்றிணைக்கும் விதிமுறை ஆகும்.

945. எழுத்துக்களை ஒலிக்க எடுக்கும் கால அளவு

- மாத்திரை

946. தொடர் மொழி என்பது

- ஒன்றோடொன்று பொருள்படத் தொடர்ந்து நிற்கும் இரண்டு முதலிய சொற்களின் கூட்டமாகும்.

947. “இலங்ங்கு வெண்பிறை சூடிய இறைவர்க்கு” என்பதில் இலங்ங்கு என்பது

- ஒற்றளபெடை

948. கூட்டுப்பெயர் என்பது

- இரண்டு அல்லது பல சொற்களை இணைத்து உருவாக்கப்படும் பெயர்ச் சொற்களாகும்.

  உ-ம் :- வானொலி

949. வல்லின,மெல்லின,இடையின எழுத்துக்கள் பிறக்கும் இடங்கள் முறையே

- மார்பு,மூக்கு, கழுத்து

950. சொற்றொடரின் வகைகள்

- எழுவாய் தொடர்
- பெயர்த்தொடர்
- வினைமுற்றுத் தொடர்

951. எச்சவினை என்பது

- முற்றுப்பெறாது நிற்கும் குறைவினைகளாகும்.
  பெயரெச்சம்
  வினையெச்சம்

952. இதழ் குவிந்து பிறக்கும் உயிர் எழுத்துக்கள்

- உ,ஊ,ஒ,ஓ,ஔ

953. அங்காத்தல் உடைய எழுத்துக்கள்

- அ,ஆ

954. சுட்டெழுத்துக்களின் வகைகள்

- அகச்சுட்டு, புறச்சுட்டு

955. நன்னூலார் குறிப்பிடும் முற்றா∴ய்தத்தின் எண்ணிக்கை

- 8

956. நன்னூலார் குறிப்பிடும் உயிரளபெடை, ஒற்றளபெடையின் எண்ணிக்கை முறையே

- 21,42

957. இடைச்சொல் என்பது

- தனித்து வராமல் பெயரையும், வினையையும் சார்ந்து வருதலாகும்.

958. நன்னூலார் குறிப்பிடும் சார்பெழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை

- 369

959. புணர்ச்சியும் அதன் வகைகளும்

- நிலைமொழியும், வருமொழியும் ஒன்றுபடப் புணர்வது புணர்ச்சி எனப்படும்.

  02 வகைப்படும் (வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி)

960. குற்றியலுகரத்தின் வகைகள்

- 06

நெடில்தொடர்க் குற்றியலுகரம் - காசு

ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் - எ∴கு

உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - வரகு

வன்தொடர்க் குற்றியலுகரம் - கொக்கு

மென்தொடர்க் குற்றியலுகரம் - பண்பு

இடைத்தொடர்க் குற்றியலுகரம் - மார்பு

961. வேற்றுநிலை மெயம்மயக்கம் என்பது

- மெய் எழுத்துக்கள் தம்மை ஒத்தவை அல்லாத மெய் எழுத்துக்களுடன் சேர்ந்து மயங்கி வருவது வேற்றுநிலை மெய்மயக்கம் எனப்படும்.

962. வாக்கியம் என்பது

- சொற்கள் பொருள்படத் தொடர்ந்து கருத்தும் முற்று பெற்று நிற்கும் தொடர்மொழி, வாக்கியம் எனப்படும்.
  உதாரணம் : கண்ணன் பாடம் படித்தான்

963. வாக்கியம் ஒன்றில் இடம்பெற வேண்டிய பிரதான உறுப்புக்கள்

- எழுவாய், பயனிலை, செயற்படுபொருள்

964. பெயர்ச் சொல்லினதும், வினைச் சொல்லினதும் சிறப்பிலக்கணங்கள் முறையே

- வேற்றுமை ஏற்றல், காலம் காட்டுதல்

965. இருதிணை மூவிடத்திற்கும் பொதுவாக வரும் பெயர்

- எல்லாம்

966. ஆகுபெயர் என்பது

- ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வருதலாகும். இது 16 வகைப்படும்.

967. மூவகை மொழிகள்

- ஒரு மொழி (மண்)
- தொடர் மொழி (இராப்பகல்)
- பொது மொழி (தாமரை)

968. சொற்களின் வகைப்பாடுகள்

- பகுபதம், பகாப்பதம்

969. சொல் என்பது

- ஓரெழுத்து அல்லது இரண்டு முதலிய பல எழுத்துக்களால் ஆக்கப்பட்டு பொருளைத் தருவது சொல்லாகும்.

970. வினைப் பகுபதங்களின் வகைகள்

- தெரிநிலை வினைப்பகுபதம், குறிப்புவினைப் பகுபதம்

971. பகுபத உறுப்புகள்

- பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்

972. சொற்களின் வகைகள்

- பெயர், வினை, இடை, உரி

973. அறுவகைப் பெயர்கள்

- பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினை பெயர், குணப்பெயர், தொழிற்பெயர்

974. திணைகளின் இரு வகைகள்

- உயர்திணை, அஃறிணை

975. உடம்படு மெய்யாக வரும் எழுத்துக்கள்

- ய்,வ்

976. குறிப்பு வினை என்பது

- செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டாமல் சொல்வோனது குறிப்பால் உணர்த்துவதாகும்.

977. வேற்றுமை ஏற்கும் இரு வினை வடிவங்கள்

- தொழிற் பெயர், வினையாலனையும் பெயர்

978. செய்வினை என்பது

- கருத்தாவின் தொழிலை நேரே உணர்த்தும் வினையாகும்.

  உ - ம் : பகைவர் கோட்டையை உடைத்தனர்

979. உரிச்சொல் என்பது

- பண்பை உணர்த்தி பெயர் வினைக்கு உரிமை பூண்டு நிற்கும் சொல்லாகும்.

980. தமிழில் வழங்கும் இருவகை வழக்குகள்

- இயல்பு வழக்கு, தகுதி வழக்கு

981. பால்பகா அஃறிணைப் பெயர்கள் என்பது

- இன்ன பால் என்று பிரித்துச் சொல்ல முடியாத பெயர்ச் சொற்களாகும்.

982. அணி என்பது

- செய்யுளுக்கு அழகு செய்வதாகும்.

983. உடன்பாட்டு வினை என்பது

- தொழில் நடத்தலை உணர்த்துவதாகும்.

984. வாக்கியத்தின் வகைகள்

- தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலப்பு வாக்கியம்

985. பெயருரிச் சொல் என்பது

- பெயர்ச் சொற்களைச் சார்ந்து வரும் உரிச்சொல்லாகும்.

  உறுமீன்

986. சாரியை என்பது

- பகுபதமொன்றில் விகுதிக்கு முன்னால் சார்ந்து வரும் இடைச்சொல்லாகும்.

987. உயர்திணைக்குரிய பால்களின் எண்ணிக்கை

- 03

  ஆண்பால், பெண்பால், பலர்பால்

988. பகாப்பதத்தின் வகைகள்

- பெயர்ப்பகாப்பதம் - நீர்
- வினைப்பகாப்பதம் - நட
- இடைப்பகாப்பதம் - இனி
- உரிப்பகாப்பதம் - நனி

989. புணர்ச்சிக்கு இன்றியமையாத மொழிகள்

- நிலைமொழி
- வருமொழி

990. அல்வழிப் புணர்ச்சி வகைகளின் எண்ணிக்கை

- 14

991. ஆசிரியர் என்பதை பிரித்து எழுதுக

- ஆசு + இரியர்

992. தற்சமம் என்பது

- தமிழ் மொழிக்கும் வட மொழிக்கும் பொதுவான எழுத்துக்கலாளாகித் தமிழிலே வழங்கி வரும் வட சொற்களாகும்.

  உ-ம் :- சந்தனம்,கமலம்

993. வேற்றுமை மயக்கத்தின் வகைகள்

- 02

  பொருள் மயக்கம்

  உருபு மயக்கம்

994. “களவும் கற்றுமற” இவ் வாக்கியத்தில் வரும் உம் இடைச்சொல் தரும் பொருள்

- எதிர்மறைப் பொருள்

995. கடலலை என்பது எவ்வகைப் புணர்ச்சி

- இயல்புப் புணர்ச்சி

996. தொகாநிலைத்தொடர்களின் வகைகள்

- 09

  (எழுவாய், விளி, வேற்றுமை, வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், இடைச்சொல், உரிச்சொல், அடுக்குத் தொடர்கள்)

997. காரண இடுகுறிப்பெயர் என்பது

- காரணங் கருதியபோது காரணத்தை உடைய பல பொருட்களுக்கும்,காரணம் கருதாத போது இடுகுறியளவாய் தனிப் பொருட்களுக்கும் வழங்கும் பெயர்

998. க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகளை கொண்டு முடிவது எவ்வகை முற்றுக்கள்

- வியங்கோள் வினைமுற்று.

999. அல்வழிப் புணர்ச்சியினுள் அடங்கும் தொடர்கள்

- தொகைநிலைத்தொடர்கள்
- தொகாநிலைத்தொடர்கள்

1000. “அடிப்படைத் தமிழ் இலக்கணம்” நூலின் ஆசிரியர்

- எம்.ஏ.நு.ஃ.மான்